கோகுலம்


குழந்தைகள் பத்திரிகை

3-2-1974

40 காசு







உயிர்களிடத்து அன்பு வேண்டும் — தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேண்டும்

— பாரதியார்



கோகுலம்

மலர் 2 : இதழ் 22

பிப்ரவரி 3, 1974

பிரமாதீச, தை 21

அடடா அட்டையில் சிங்கம் ஜோர்!
விடடா சட்டையை, இங்கே பார்!

வண்ணப்படம் : D. பாபுராஜ்

சந்தா விவரம் :

உள் நாடு :

ஒரு வருடம் ... ரூ. 10–00
ஆறு மாதம் ... ரூ. 5–00

இலங்கை :

ஆண்டுச் சந்தா : ரூ. 15–00
(இலங்கை நாணயப்படி)


இதர நாடுகள் :

ஆண்டுச் சந்தா ரூ. 25–00

★

மானேஜர், கோகுலம்
கல்கிப் பூங்கா, சென்னை - 600031

குல்லாக்குரங்கு 22





பிள்ளையார் பெருமை

திருமுருக கிருபானந்தவாரியார்

நவரத்தினங்கள் இழைத்த மணித் தவிசில் இயமன் கொலுவீற்றிருந்தான். விண்ணவர், கின்னரர், கிம்புருடர், கருடர், இயக்கர், சாரணர், முனிவர் யாவரும் பணிந்து புடை சூழ்ந்திருந்தனர்.

அப்போது அரம்பையர் தமது முழுத் திறமையைக் காட்டி நடனம் செய்தார்கள். அரம்பையர்களுள் மிகுந்த அழகுடைய திலோத்தமையின் மேலாடை நடன வேகத்தில் நழுவியது. அவள் நாணி அவ்விடத்தை விட்டு அகன்றாள்.

ஆடை நழுவியபோது திலோத்தமையைக் காமத்துடன் இயமன் உற்று நோக்கினான். உடனே இயமன் எழுந்து அந்தப்புரத்தை அடைந்தான். அந்தக் கணத்தில் அனலாசுரன் என்ற கொடிய அரக்கன் பிறந்தான். கலப்பை போன்ற பெரிய பற்களும், கரிய உருவும் பெரிய மீசையும், அனற் கொழுந்துகளைப் போன்ற புற மயிர்களும் உடைய அவனைக் கண்டு அமரர்கள் அஞ்சி ஓடினார்கள். அவனைக் கண்ட இயமனும் அஞ்சி உள்ளே நுழைய முடியாதபடி கதவைச் சாத்தித் தாளிட்டுக் கொண்டான்.

அனலாசுரன் இயமனைத் தந்தையென்று கருதி இடர்ப்படுத்தாமல், ஒதுங்கிச் சென்றான். நிலவுலகிலுள்ள எல்லா உயிர்த் தொகைகளையும் பிடித்துக் கடித்துத் தின்றான். விண்ணுலகம் போனான். இந்திரன் முதலிய இமையோர் நடுநடுங்கி வைகுண்டம் போய்த் திருமாலிடம் கூறி முறையிட்டார்கள். நாராயணர் அனலாசுரனுடைய ஆற்றலை எண்ணி, இவன் விநாயகப் பெருமான் ஒருவருக்கு மட்டுமே அடங்க வல்லான். பிறரால் இவனை அடக்க ஒண்ணாது' என்று கருதினார். எல்லோரும் விநாயகருடைய திருநாமங்களைக் கூறித் துதி செய்தார்கள்.

விநாயகர் ஓர் அந்தணச் சிறுவனாக அவர்கள் முன் தோன்றியருளினார். விண்ணவர்கள் இவர் விநாயகர் என உணர்ந்து, அவரைப் பணிந்து பரவினார்கள்.

அனலாசுரன் தேவலோகம் போய் அங்கே தேவர்களைக் காணாது பலவிடங்களிலும் தேடி அலைந்தான். பின்னர் தேவர்கள் கூடியிருந்த இடத்துக்கு வந்தான். முனிவர்கள் நடுநடுங்கி ஓடினார்கள். தேவர்கள் விநாயகருடைய பின்புறத்தில் சென்று ஒடுங்கினார்கள். விநாயகர், ''வானவர்களே! நீங்கள் அஞ்சற்க'' என்று அருளுரை கூறினார். எதிர்த்து வந்த அனலாசுரனைச் சிவமூர்த்தி ஆலகால விஷத்தை உண்டது போல் எடுத்து விழுங்கி விட்டார். ''அவுணனே! நீ வெளியே உள்ள உயிர்களை உண்டது போல், நமது திருவயிற்றுக்குள் அளவற்ற உலகங்களும் உயிர்களும் இருக்கின்றன. அவற்றை உண்ணக் கடவாய்'' என்று கூறிச் சிரித்தருளினார்.


அனலாசுரன் அவருடைய திருவயிற்றுள் சென்று அடங்கி விட்டான். அதனால் எல்லா உயிர்களின் வயிறுகளில் நெருப்புப் பற்றியது போன்ற கொடிய வெப்பம் உண்டாகியது. அதனால் அளவற்ற அல்லல் உற்றார்கள். விநாயகருடைய திருவயிறு குளிர்ந்தால் எல்லாருடைய வயிறுகளும் குளிரும் என்று எண்ணினார்கள்.

இந்திரனுடைய ஏவலினால் சந்திரன் விநாயகர் திருமுடி மீது அமுத தாரைகளைப் பொழிந்தான். திருமால் அளவற்ற தாமரை மலர்களைக் கொணர்ந்து ஒத்தினார். கண்ணுதற் கடவுள் தாம் அணிந்திருந்த ஆதிசேடன் முதலிய பாம்புகளைக் கொணர்ந்து அணிவித்தார். இவ்வாறு பலரும் பலவகை உபசாரம் செய்தும் விநாயகருடைய வெப்பம் தணியவில்லை.

பிறகு எண்பதாயிரம் முனிவர்கள் அங்கு வந்து மிகவும் குளிர்ச்சியைத் தருகின்ற அறுகுகளை ஆளுக்கு இருபத்தொன்று விதம் முடி முதல் அடிவரை சொரிந்தார்கள். விநாயகருடைய வெப்பம் விலகியது. அதனால் உயிர்களின் வெப்பங்களும் இறங்கின.

விநாயகர் முனிவர்களைப் பார்த்து, ''நீங்கள் சொரிந்த அறுகுகளால் நம் வெப்பம் தணிந்தபடியால் நம்மை வழிபடுபவர்கள் பலவகை மலர்களால் வழிபட்டாலும் அறுகை அவசியமாகக் கொண்டு வழிபடுதல் வேண்டும். அறு இல்லாத வழிபாட்டை நாம் விரும்புவதில்லை. குறைந்தபட்சம் இருபத்தொரு அறுகாவது வேண்டும்'' என்று அருள் புரிந்தார். அந்த இடத்தில் தேவர்கள் ஆலயம் அமைத்து ''காலானலப் பிரசமர்'' என்று பேர் அமைந்த விநாயகரை எழுந்தருளப் புரிந்து வழிபட்டார்கள்.

இதனால் விநாயகருக்கு அறுகு சிறந்ததாக ஆயிற்று.



மன்னரான மாடசாமி

வாண்டுமாமா

ரொம்பரொம்பக் காலத்துக்கு முன்னாலே ஓர் ஏழை இருந்தான். எந்தக் காலத்திலுமே ஏழையும் உண்டு, பணக்காரனும் உண்டு. அந்த ஏழைக்கு இரண்டு பிள்ளைகள். அண்ணனைவிடத் தம்பி அழகனாகவும் சாமர்த்தியசாலியாகவுமிருந்தான். இது அண்ணனுக்குப் பிடிக்கவில்லை. பொறாமைப்பட்டான். வயது ஆக ஆக அண்ணனின் பொறாமையும் விரோதமும் வளர்ந்து கொண்டு வந்தன. அதே மாதிரி தம்பியின் அழகும் திறமையும் வளர்ந்தன.


தம்பியை எப்படியாவது கொன்று விடவேண்டும் என்ற குரோத மனப்பான்மை கொண்ட அண்ணன் ஒரு நாள் அவனுடன் காட்டுக்குப் போனான். தம்பியுடன் ரொம்ப அன்பாகப் பேசியபடியே காட்டுக்குள் வெகுதூரம் அழைத்துப் போனான். தக்க சமயம் பார்த்துத் திடீரென்று தம்பிமீது பாய்ந்து அவனை அப்படியே ஒரு மரத்துடன் சேர்த்து இறுகக் கட்டிப் போட்டான். "நீ இங்கேயே இப்படியே பசியாலும் தாகத்தாலும் சாகவேண்டியது தான். இந்தக் காட்டுக்குள் யாரும் வரமாட்டார்கள்; உனக்கு உதவவும் மாட்டார்கள்" என்று கூறித் தன் வழியே திரும்பிப் போய் விட்டான் அண்ணன்.

தம்பி என்ன செய்வான், பாவம். தன்மீது அண்ணனுக்கு அன்பில்லை என்று தெரியும். ஆனால் இப்படி ஒரு குரூரமான காரியம் செய்வான் என்று எதிர்பார்க்கவில்லை. பகலெல்லாம் பசியுடன் கட்டுண்ட நிலையிலேயே இருந்தான் தம்பி. இனி அவனுக்கு ஒரு பெயர் கொடுப்போம். அப்போதுதான் நான் கதை சொல்லவும் நீங்கள் படிக்கவும் வசதியாக இருக்கும். மாடசாமி என்று பெயரிடலாம் அவனுக்கு. இருட்டும் சமயத்தில் அந்த வழியாக ஆடுகளை ஓட்டிக் கொண்டு ஒரு கிழவன் வந்தான். அவன் முதுகில் பெரிய கூனல். மரத்தில் கட்டுண்டு கிடக்கும் மாடசாமியைக் கண்ட ஆட்டிடையன் "யாரப்பா உனக்கு இந்தக் கொடிய தண்டனையைக் கொடுத்தது?" என்று கேட்டான்.

மாடசாமி மடையனா, உண்மையைச் சொல்ல? "தண்டனையா? இது நானாக ஏற்றிக் கொண்ட சிகிச்சையல்லவா? உன்னைப் போலவே என் முதுகிலும் கூனல் இருந்தது. அதை நிமிர்த்தி நேராக்க ஒரு வைத்தியர், என்னை இப்படி இந்த மரத்துடன் வைத்துக் கட்டிவிட்டுப் போனார். இப்போது என் கூன் நிமிர்ந்து நேராகி விட்டது. இது வெறும் கட்டுமட்டுமல்ல. தகுந்த முறையில் தக்க இடத்தில் பல முடிச்சுக்களைப் போட்டுக் கட்ட வேண்டும். அப்போதுதான் கூன் நிமிரும். அந்த ரகசியமும் எனக்குத் தெரியும்" என்றான் மாடசாமி.

யாருக்குத்தான் ஆசை இருக்காது? கூனல் முதுகுடைய ஆட்டிடையன் மாடசாமியிடம் கெஞ்சினான். "தம்பி, தம்பி! என் கூனையும் நிமிர்த்திவிடப்பா. உனக்குப் புண்ணியமாக இருக்கும்" என்றான். மாடசாமியும் ஒப்புக் கொண்டான்.






தன்னைக் கட்டவிழ்த்து விடுதலை செய்யும்படி கூறினான். ஆட்டிடையனை மரத்தோடு வைத்துக் கயிற்றைப் பல தடவை சுற்றிப் பலமாகக் கட்டினான். "இப்படியே மூன்று நாட்கள் அன்ன ஆகாரமின்றி இருக்க வேண்டும். கூன் நிமிர்ந்து போகும்" என்று கூறியபடியே அவனது ஆடுகளை விரட்டி ஓட்டிக் கொண்டு கிளம்பி விட்டான் மாடசாமி. பாவம், கிழவனுக்கு அப்போதுதான் தான் ஏமாற்றப்பட்டது புரிந்தது. "ஏய்! ஆடுகள், என் ஆடுகள்" என்று கத்தினான். ஆனால் என்ன பலன்? மாடசாமி திரும்பிக்கூடப்பார்க்கவில்லை.

ஆடுகளை வைத்துக் கொண்டு என்ன செய்வது? ஆனால் மாடசாமி தந்திரக்காரனாயிற்றே! ஆடுகளைச் சந்தையில் விற்றுப் பணமாக்கிக் கொண்டான். இப்படியே அடுத்தடுத்துப் பல திருட்டுக்களைச் செய்தான். மாட்டு மந்தைகளை இழந்தவர்கள் பலர்; குதிரைகளைப் பறி கொடுத்தவர் சிலர். மாடசாமியின் புகழ் நாடெங்கும் பரவிவிட்டது. பலே திருடன் என்றார்கள், அவன் சாகஸமான திருட்டைக் கேட்டவர்கள். பொருளைப் பறி கொடுத்தவர்கள் ஆத்திரத்தினால் பொருமினார்கள். மன்னரின் காதுக்கு மாடசாமியின் செயல்கள் எட்டின. இவ்வளவு திறமை வாய்ந்த பக்காத் திருடனை எப்படியாவது பிடித்துக்கொண்டு வரும்படி தம் வீரர்களுக்குக் கட்டளையிட்டார். கொஞ்ச நாளில் மாடசாமி மன்னர் முன்னால் கொண்டு வந்து நிறுத்தப்பட்டான்.

"பல திருட்டுக்களைச் செய்த உனக்கு மரண தண்டனைதான் விதிக்க வேண்டும். ஆனாலும் உன் திறமையைப் பாராட்டி ஒரு நிபந்தனை விதிக்கிறேன். இந்நாட்டின் எல்லையில் ஒரு பயங்கர ராட்சத மிருகம் இருக்கிறது. அதனிடம் ஒரு பறக்கும் குதிரை உள்ளது. எப்படியாவது அதை அதனிடமிருந்து திருடிக் கொண்டு வந்தால் உனக்கு விடுதலை. இல்லா விட்டால் உன் தலை தரையில் உருளும்" என்றார் மன்னர்.

"இவ்வளவுதானே? பறக்கும் குதிரையோடு பறந்து வருகிறேன், போதுமா?" என்று கிளம்பினான் பக்காத் திருடனான மாடசாமி.

பயங்கர மிருகம் வசிக்கும் கோட்டைக்குப் போவது அவனுக்கு அப்படியொன்றும் சிரமமாக இல்லை. அங்குள்ள குதிரை லாயத்துக்குள் போய் வைக்கோல்களிடையே ஒளிந்து கொண்டான். குதிரை அழகான, கம்பீரமான குதிரை. ஆனால் மந்திர சக்தி வாய்ந்தது. அதைக் கட்டியிருந்த இடத்துக்கு மேலே அந்த மிருகம் (டிராகன்) படுத்துக் கொண்டிருந்தது. மெள்ளக் கையை நீட்டிக் குதிரையின் கடிவாளத்தைப் பற்றினான். உடனே குதிரை கனைத்தது. அதன் குரல் கேட்டு விழித்துக்கொண்ட மிருகம் "என்னது? ஏன் கனைத்தாய்? யாராவது மனிதர்களா?" என்று கேட்டது. குதிரை "இல்லை..." என்று பதில் கூறியது. அந்தக் குதிரை பேசும் சக்தி படைத்தது. மிருகம் மறுபடியும் தூங்க ஆரம்பித்தது. இரண்டாவது தடவையும் மாடசாமி அதன் கடிவாளத்தைத் தொட, குதிரை கனைக்க, மிருகம் விழித்துக் கொண்டது. இந்தத் தட



வையும் குதிரையினால் தன் கடிவாளத்தைத் தொட்டது யார் என்று கூற முடியவில்லை. மாடசாமி அத்தனை திறமையாக ஒளிந்து கொண்டிருந்தான். மூன்றாவது தடவை குதிரை கனைத்த போது மிருகத்துக்கு மகா கோபம் வந்து விட்டது: அடிக்கடி கனைத்துத் தன் தூக்கத்தைக் குலைக்கிறதே இந்தக் குதிரை என்று. ஆகவே கீழே இறங்கி வந்து அதை நையப் புடைத்துவிட்டுப் போய்ப் படுத்துக்கொண்டது. அடுத்த தடவை மாடசாமி அதன் கடிவாளத்தைப் பிடித்தபோது குதிரை கனைக்கவில்லை. ஆகவே மாடசாமி வெளியில் வந்து அதைக் கட்டவிழ்த்து அதன்மீது ஏறிக்கொண்டான். அடுத்த விநாடி குதிரை ஆகாயத்திலே பறக்கலாயிற்று. பறந்து கொண்டே மாடசாமி கூவினான்: ''பொல்லாத மிருகமே! உன் பறக்கும் குதிரை எங்கே என்று யாராவது கேட்டால் பக்காத் திருடன் மாடசாமி என் கண் முன்னாலேயே அதைத் திருடிக் கொண்டு போனான் என்று சொல்லு!'' பாவம், டிராகன்! அதனால் ஆகாயத்திலே பறக்கும் மாடசாமியை என்ன செய்ய முடியும்?

மன்னர் முன்னால் பறக்கும் குதிரையோடு போய் இறங்கினான் மாடசாமி. அந்த ராஜா ஒரு பேராசைக்காரர். ''ஓ! பறக்கும் குதிரைதானே? இதைக் கொண்டு வருவது அப்படி யொன்றும் கஷ்டமில்லை. அந்த மிருகத்தினிடம் ஒரு அற்புதமான போர்வை இருக்கிறது. அதன் ஓரங்களி லெல்லாம் மணிகள் வைத்துத் தைத்திருக்கும். அதைக் கொண்டு வா பார்ப்போம்!'' என்றார்.

''அந்தப் போர்வைதானே வேண்டும்?'' என்றபடி மாடசாமி மறுபடியும் மிருகத்தின் கோட்டைக்குப் போனான். இருட்டும்வரை காத்திருந்தான். பிறகு கோட்டைச் சுவர் மீது ஏறி அந்த மிருகம் படுத்திருக்கும் அறைக்குமேலே போனான். வெளிச்சத்துக்காக ஒரு திறப்பு இருந்தது கூரையில். அதன் அருகே படுத்துக்கொண்டு ஒரு சங்கிலியைக் கீழே தழைய விட்டான். அதன் நுனியில் ஒரு கொக்கி இணைத்திருந்தது. மிருகமும் அதன் மனைவியும் போர்வையைப் போர்த்திக் கொண்டு படுத்திருந்தன. மாடசாமி லாகவமாக கொக்கியைப் போர்வையில் மாட்டி மெள்ள மேலே இழுக்கலானான். ஆனால் அதில் இணைத்திருந்த ஏராளமான மணிகள், கணகணவென்று ஒலி எழுப்பவே, விழித்துக் கொண்ட டிராகன் தன் மனைவிதான் போர்வையைத் தன் பக்கம் இழுக்கிறாளாக்கும் என்று ''ஏய், என்னது, எல்லாப் போர்வையையும் நீயே இழுத்துக் கொண்டால் எனக்குக் குளிராதா?'' என்று கோபத்துடன் போர்வையை வெடுக்கென்று தன் பக்கமாக இழுத்தது. அந்த வேகத்தில் கூரையிலிருந்து கம்பினால் கொக்கி போட்டு இழுத்துக்கொண்டிருந்த மாடசாமி 'பொதகடீர்' என்று டிராகன் மீதே வந்து விழுந்தான்.

அவ்வளவுதான். டிராகன் பிடிக்காமல் இருக்குமா? மாடசாமி அகப்பட்டுக்

கொண்டான். ''ஆ! மாட்டிக் கொண்டாயா? இரு இரு. நாளைக்கு எனக்குப் பிறந்த நாள். உன்னைச் சமைத்து வைப்பாள் என் மனைவி. நான் வேட்டையாடிவிட்டு வந்து உன்னைச் சுவைப்பேன்'' என்று கூறி மாடசாமியைக் கயிற்றினால் நன்றாகக் கட்டிப் பரண்மீது போட்டு விட்டு மறுபடியும் தூங்கப் போயிற்று மிருகம்.


இரவு முழுதும் மாடசாமி சும்மாவா இருப்பான்? மிருகத்தின் கட்டுக்களையெல்லாம் மெள்ள மெள்ளத் தளர்த்தி அவிழ்த்துக் கொண்டு விட்டான். பக்காத் திருடனில்லையா? ஆனால் தான் விடுதலை ஆனதை வெளிப்படுத்தாமல் கட்டிய நிலையில் இருப்பது போல அங்கேயே அசையாமல் கிடந்தான். காலையில் ஆண் மிருகம் வேட்டைக்குப் போய்விட்டது. பெண் மிருகம் தன் அலுவல்களை முடித்துக் கொண்டு மனிதனைச் சமைப்பதற்காக மாடசாமியின் அருகே வந்தது. அவன் கட்டப்பட்டுக் கிடக்கிறானாக்கும் என்று அலட்சியமாக கயிற்றைப் பிடித்து இழுத்தது. அடுத்த நிமிஷம் கயிறு அதன் கையோடு வர, இழுத்த வேகத்துக்கு அங்கு எதிர்ப்பு இல்லாததால் தடாலென்று தலைகுப்புறப்போய் எட்ட விழுந்தது, நிலைதடுமாறி. மாடசாமி இதைத்தானே எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். குபீரென்று அதன் மீது பாய்ந்து அமுக்கி அதே கயிற்றால் அதை நன்றாகக் கட்டினான். பிறகு தயாராக இருந்த கணப்பின்மீது சமையலுக்காக அது தயார்ப்படுத்தி வைத்திருந்த பாத்திரத்தில் பெண் மிருகத்தைத் தூக்கிப் போட்டான். பக்குவமாக அதைப் பதார்த்தங்களிட்டுச் சமைத்து ஆண் மிருகம் சாப்பிடுவதற்கு ஏற்றபடி மேஜை மீது வைத்தான். படுக்கையறையிலிருந்த அதிசயப் போர்வையை எடுத்துக் கொண்டு உல்லாசமாகக் கிளம்பினான்.

அரண்மனையில் அரியாசனத்தில் அமர்ந்திருந்த அரசரின் முன்னால் கொண்டு போய் மணிகள் கட்டிய போர்வையை அலட்சியமாக விரித்து நின்றான் மாடசாமி. மன்னருக்குத் 'திக்'கென்றது. ''படுக்கை விரிப்புத் தானே? மிருகம் தூங்கிக் கொண்டிருக்கும்போது சுலபமாகக் கவர்ந்து வந்துவிடலாமே? உன்னுடைய நிஜமான திறமையை வெளிப்படுத்த அந்த மிருகத்தையே இங்கு கொண்டு வந்தால்தான் நீ பிழைக்கலாம். இல்லாவிட்டால்...''

''என் உயிர் பறிபோகும் என்பீர்கள். அதுதானே?'' என்று இடைமறித்த மாடசாமி ''உங்கள் விருப்பப்படியே அந்தக் கொடிய மிருகத்தை இங்கு கொண்டு வருகிறேன். ஆனால் அதற்கு எனக்கு இரண்டு வருட அவகாசம் தேவை'' என்றான்.

''தாராளமாக எடுத்துக் கொள். ஆனால் இரண்டாவது ஆண்டின் முடிவில் அந்த மிருகத்தை உயிரோடு இங்கு கொண்டு வந்து நிறுத்த வேண்டும்'' என்றார் மன்னர்.

மாடசாமி இரண்டாண்டுகள் அவகாசம் கேட்டது எதற்காகத் தெரியுமா? தாடி வளர்த்துத் தன்னை உருமாற்றிக் கொள்ளத்தான். ஒரு தடவை அந்த மிருகம் அவனைப் பார்த்திருக்கிறதே! மறுபடியும் பார்த்தால் அடையாளம் கண்டுகொள்ளாதா? இரண்டு ஆண்டுகளில் மாடசாமி கொழுத்த வாலிபனானான். கருகருவென்று முகத்தில் தாடி



மண்டியது. மிருகத்தின் கோட்டையை நோக்கிக் கிளம்பினன். வழியில் ஒரு பிச்சைக்காரனின் உடைகளை வாங்கி அணிந்து கொண்டு தன்னை முழுமையாக மாற்றிக் கொண்டான்.

மிருகத்தின் கோட்டைக்குப் போனபோது அது மும்முரமாக ஒரு பெரிய பெட்டியைச் செய்து கொண்டிருந்தது. முடியும் தறுவாயிலிருந்தது அது. நிறைய இரும்புப் பட்டைகள் எல்லாம் வைத்து ரொம்பப் பாதுகாப்பான பெட்டியாக இருந்தது.

''வணக்கம், வணக்கம்! பராக்கிரமம் மிக்க டிராகனே! இந்த ஏழையின் பசிக்கு ஏதாவது வழங்க முடியுமா?'' என்று பணிவுடன் கேட்டான் மாடசாமியாகிய பிச்சைக்காரன்.

மிருகம் அன்று ரொம்ப மகிழ்ச்சியாக இருந்தது. ''கொஞ்சம் பொறு. இந்தப் பெட்டியில் கொஞ்சம் வேலையுள்ளது. இதை முடித்துவிட்டு வீட்டினுள் போய் உனக்குத் தர ஏதாவது இருக்கிறதா பார்க்கிறேன்'' என்றது.

''இந்தப் பெட்டியை எதற்காகச் செய்கிறீர்கள்?'' என்று கேட்டான் மாடசாமி.

''இதுவா? என் மனைவியையும் கொன்று, என்னுடைய பறக்கும் குதிரையையும் கவர்ந்து சென்ற ஒரு பக்காத் திருடனை இதற்குள் போட்டு மூடி அடைக்கத்தான்'' என்றது மிருகம்.

''அப்படியா? அந்தப் பலே திருடனுக்கு ஏற்ற தண்டனைதான். ஆனல் இந்தப் பெட்டி ரொம்பச் சின்னதாக இருக்கே? இதற்குள் அவனை அடைக்க முடியுமா? அவன் பெரிய ராட்சதன் போல் இருக்கிருனே! நான் ஒருதடவை அவனைப் பார்த்திருக்கிறேன்..''

''நீ தப்பாகக் கணக்குப் போடுகிருய். இந்தப் பெட்டி எத்தனை பெரிசு, என்னையே இதற்குள் அடைக்கலாமே?''

''நியாயம்தான். கிட்டத்தட்ட அந்தப் பயல் உங்கள் உயரம்தான் இருப்பான். நீங்கள் இதனுள் அடங்க முடியுமானல் அவனையும் அடைக்கலாம். ஆனல்...'' மேலும் கீழும் பார்த்து முகவாயைச் சொறிந்த மாடசாமி, ''உங்களுக்கு இந்தப் பெட்டி ரொம்பச் சின்னதென்று நினைக்கிறேன்'' என்றான்.

''முட்டாள்தனமாக உளருதே. எவ்வளவு பெரிய பெட்டி இது? எத்தனை நாளாகச் செய்து வருகிறேன் இதை? இதோ பார்!'' என்று கூறிப் பெட்டியினுள் ஏறி அதற்குள் தன் உடலைச் சுருட்டி மடக்கிக் கொண்டு உட்கார்ந்து காண்பித்தது. அடுத்த விநாடி மாடசாமி படீரென்று அதன் மூடியைத் தள்ளி மூடி அதன் தாழ்ப்பாள்களை அழுத்திப் பூட்டினன். ''எங்கே உன் பலமெல்லாம் பயன்படுத்தி முண்டிப் பெட்டியைத் திறக்க முயன்றுபார்'' என்றான் வெளியிலிருந்தபடியே. அதுவும் முக்கி முனகி மூச்சுக்கட்டிப் பெட்டியை உடைத்துக் கொண்டு வெளிவர முயன்றது. முடியவே இல்லை.


''அற்புதமாகத் தயாரித்திருக்கிறாய், பெட்டியை'' என்று குதூகலப்பட்டான் மாடசாமி.

''பாராட்டுப் போதும். பூட்டுக்களைத் திறந்து விடு. நான் வெளியே வரவேண்டும்'' என்று உறுமியது டிராகன் மிருகம். ஆனல் அதற்கு எவ்விதமான பதிலும் கிடைக்கவில்லை. மாடசாமி அதைப் பிடிக்கத்தானே வந்தான்? விடுவிக்க இல்லையே! தன் வேஷத்தைக் கலைத்துவிட்டுத் தயாராக மறைவில் நிறுத்தியிருந்த வண்டியில் பெட்டியை ஏற்றிக் கொண்டு நகரத்துக்கு விரைந்தான்.


மன்னரின் முன்னல் பெட்டியை இறக்கிய மாடசாமி அதனுள் ராட்சத மிருகம் இருப்பதாகக் கூறினன். மன்னருக்கு வியப்பு. அவநம்பிக்கை. ''இதற்குள்ளா? அத்தனை பெரிய மிருகத்தை இதற்குள் எப்படிப் பிடித்து அடைத்தாய்? என்னல் நம்ப முடியவில்லையே?'' என்றவர் சிங்காதனத்திலிருந்து இறங்கி வந்து அவன் சொன்னபடி உள்ளே அது இருக்கிறதா என்று பார்க்கப் பூட்டுக்களை அகற்றினர். அடுத்த விநாடி அடைபட்டிருந்த மிருகம் ஆத்திரத்துடன் அரசரைத் தனது நாக்கை நீட்டிச் சுருட்டி வாய்க்குள் இழுத்துக் கொண்டுவிட்டது. பெட்டியின் பின்னல் மாடசாமி தயாராக நின்றிருந்தான்; அதன் மூடி அதிகம் திறந்துவிடாதபடி கவனித்துக் கொண்டு. பேராசை பிடித்த மன்னரை டிராகன் கபளீகரம் செய்ததும் அது முற்றிலுமாக வெளியே வராதபடி படீரென்று மூடியை அறைந்து சாத்திப் பூட்டுக்களை மாட்டியதோடு பெரிய பெரிய ஆணிகளை அடித்து அதைத் திறக்க முடியாதபடியும் செய்தான்.

அதன் பிறகு? பிறகு என்ன? இத்தனை திறமைசாலியான ஓர் ஆண்மகனை யார்தான் மணந்துகொள்ள விரும்பமாட்டார்கள்? அரச குமாரி கழுத்தை நீட்டினள் தாலி கட்ட, மந்திரி பிரதானிகள் கையை நீட்டினர்கள் அவனைச் சிங்காதனத்தில் உட்கார்த்தி வைக்க!

சிரிக்கச் சிரிக்க..! (சாமா)



யானையும்



குரங்கும்

ஜானகி சுப்பிரமணியம்

அழகான ஒரு சிற்றூறு. அதை அடுத்து ஒரு பெரிய காடு. அந்தக் காட்டிலே ஏராளமான மிருகங்கள் உண்டு. அவை சிநேகமாய் வாழ்ந்து வந்தன. அங்கே ஒரு பழைய மரம். பல வருஷங்களைக் கண்ட மரம். அதிலுள்ள ஒரு பெரிய பொந்திலே ஒரு கிழ ஆந்தை வசித்து வந்தது.

காட்டிலே பெரிய யானை ஒன்றும் குரங்கு ஒன்றும் மிகவும் சிநேகமாய் இருந்தன. ஒருநாள் இவை இரண்டுக்கும் ஒரு விவாதம் எழுந்தது. யார் புத்திசாலி, யார் பெரியவன் என்பதில் சண்டை. யானை தான் தான் பலசாலி என்று சொல்லி 'நானே சிறந்தவன், நானே பெரியவன்' என்றது. குரங்கு, ''உனக்கு உடல் பெரிது. ஆனால் என்னைப் போல் வேலை செய்ய முடியுமா? நாங்கள் இராமனுக்கே அணை கட்டினோமாக்கும்'' என்று பெருமையடித்துக் கொண்டது.

யானை கொஞ்ச நேரம் யோசனை செய்தது.

“மரப் பொந்திலே வசிக்கிற ஆந்தை நம் எல்லோரையும்விடப் புத்தியுள்ளது. வயதிலும் பெரியது. அதனிடம் கேட்போம் வா'' என்றது யானை. ஆந்தை பகல் முழுதும் தூங்கும். இருட்டிய பிறகே எழுந்திருக்கும். ஆகவே இரண்டும் சூரியன் மறையும் சமயம் அங்கே போயின.

ஆந்தை மெள்ள எழுந்து உட்கார்ந்தது. குரங்கும் யானையும் தாம் வந்துள்ள காரணத்தை அதனிடம் கூறின. இருவரையும் ஆந்தை மாறி மாறிப் பார்த்தது. பிறகு அமைதியான குரலில் ''நான் ஒரு வேலை சொல்லுகிறேன். அதை யார் செய்து முடிக்கிறீர்களோ, அவர்தான் புத்திசாலி. பெரியவன்'' என்று சொல்லிற்று.


குரங்கும் யானையும் ஆந்தை சொல்லப் போகும் வேலையை அறிய ஆவலோடு காத்து நின்றன.

''அடுத்த காட்டிலே ஒரு பெரிய மரம் இருக்கிறது. அதன் பழங்கள் ரொம்பவும் உயரிவானவை. அதன் ருசிக்கும் இனிமைக்கும் ஈடே கிடையாது. அந்தப் பழத்தை யார் கொண்டு வருகிறீர்களோ அவனே பலவான், புத்தியுள்ளவன்; பெரியவன்'' என்றது ஆந்தை.

'சரி' என்று யானையும் குரங்கும் அடுத்த காட்டை நோக்கிப் புறப்பட்டன. ஆற்றைத் தாண்டித்தான் காட்டுக்குள் புக வேண்டும். ஆற்றிலே செவேல் என்று வெள்ளம். நொப்பும் நுரையுமாய் இரு கரையும் புரள ஓடிக்கொண்டிருந்தது. அக்கரை சேருவது எப்படி? யானை துதிக்கையை உயர்த்தி நாலு புறமும் பார்த்தது. குரங்கு கரை ஓரத்து மரத்தில் ஏறி நோட்டம் பார்த்தது.

''வெள்ளம் அதிகம்தான். இருந்தாலும் எனக்கு வயிறளவுதான்'' என்றது யானை. பிறகு குரங்கைப் பார்த்து, நீ என் முதுகிலே ஏறிக் கொள். அக்கரை போய்விடலாம்'' என்றது. குரங்கு சந்தோஷத்துடன் யானையின் முதுகில் ஏறிக் கொண்டது. அக்கரை சேர்ந்தாயிற்று.

இரண்டும் அந்தப் பழ மரத்தை அடைந்தன. மரத்திலே உச்சாணிக் கிளையிலே அருமையான பழங்கள் பொன் நிறமாய் ஊசலாடின. யானை மரத்தைப் பிடித்துப் பலம் கொண்ட மட்டும் உலுக்கு உலுக்கென்று உலுக்கியது. ஒரு பழம்கூட விழவில்லை. சோர்ந்து போய் அதன் கிழேயே படுத்துக் கொண்டது யானை.



குரங்கு கிளைக்குக் கிளை தாவியது. உச்சிக்கிளைக்கு ஏறி ஒரு கொத்திலே இருந்த நாலு பெரிய பழங்களைப் பறித்துக் கொண்டு மெள்ளமெள்ள இறங்கிக் கீழே வந்தது. மறுபடியும் இரண்டுமாக ஆற்றைக்கடந்து ஆந்தை வசித்த மரப் பொந்தின் அருகே வந்து சேர்ந்தன.

வழக்கம்போல் ஆந்தை தூக்கத்திலே ஆழ்ந்திருந்தது. இவைகளின் கூச்சலைக் கேட்டு அது மெல்லப் புரண்டது. ''பழம் வந்து விட்டது. இப்பொழுது சொல்லுங்கள், யார் பெரியவன். யார் புத்திசாலி'' என்று கேட்டன. ஆந்தை பரிவோடு, ''ஆமாம் ஆற்றிலே வெள்ளம் நிறையப் போகிறதே. யார் தாண்டியது? யார் பழம் பறித்தது?'' என்று கேட்டது.

யானை, ''நான்தான் தாண்டினேன்'' என்றது.

குரங்கு, 'நான்தான் பழம் பறித்தேன். யானைக்கு உச்சாணிக் கொப்பு எப்படி எட்டும்? உலுக்கு உலுக்கு என்று உலுக்கிற்றே தவிர ஒரு பழம்கூட விழவில்லை'' என்றது.

ஆந்தை குரங்கைப் பார்த்து, ''யானையின் உதவி இல்லாமல் உன்னால் ஆற்றைத் தாண்டியிருக்க முடியாது. அதே போல'' என்ற ஆந்தை யானையைப் பார்த்து ''குரங்கு மரத்திலே ஏறாமல் பழங்களைப் பறித்திருக்க முடியுமா? ஆகவே நீங்கள் தனித் தனியே போயிருந்தால் ஒன்றுமே செய்திருக்க முடியாது. சேர்ந்து போனதனால் தான் ஆற்றையும் கடக்க முடிந்தது. பழமும் கிடைத்தது. ஆகவே இருவரும் யார் பெரியவன் யார் புத்திசாலி என்பதை விடச் சேர்ந்து செய்வதுதான் நன்மை என்று புரிந்து கொண்டு இனிமேல் சிநேகமாயிருங்கள்'' என்றது.

சேர்ந்து வாழ்வதே சிறந்த வலிமை.



கார்க்காகக் கடலில் மிதக்கலாம்!

விகெயெம்

கிட்டுவையும் பட்டுவையும் பரமேசுவரன் தாத்தா அன்று கடற்கரைக்கு அழைத்துப் போயிருந்தார். 'இந்த நடுக்கும் குளிரிலா' என்கிறீர்களா? ஆமாம். ஆனால் அவர்கள் கடற் கரைக்குப்போக வேண்டுமென்று திட்டமிட்டுப் போகவில்லை. வேறு ஏதோ காரியமாகப் போனவர்கள் கடற்கரை அருகே இருக்கவே, "பீச்சுக்குப் போகலாம், தாத்தா!" என்று கிட்டு வற்புறுத்தினான். மூவரும் போனார்கள்.

அலைகள் சுருண்டு சுருண்டு வந்து கரையில் மோதி உடைந்து திரும்பிக் கொண்டிருந்தன. சில வாலிபர்கள்—அவர்கள் மீனவர்களாக இருக்கலாம்—அலைகளின் மீது பாய்ந்து நீந்திக் கொஞ்ச தூரம் போனார்கள். மறுபடியும் அவர்களைப் பெரிய அலைகள் கரைக்குக் கொண்டு வந்து தள்ளின. வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த கிட்டு "தாத்தா, இந்த அலைகளில் நீந்த அனுபவமும் திறமையும் வேண்டுமில்லையா?" என்று கேட்டான்.

"சந்தேகம் இல்லாமல்" என்றார் தாத்தா.

"எனக்கொரு ஆசை. நீந்தவும் தெரியக்கூடாது. ஆனால் கடல் நீரில் எவ்வித சாதனமும் இல்லாமல் அப்படியே மிதந்தபடி இருக்கவேண்டும், தொட்டி நீரில் உட்கார்ந்திருப்பது போல. ம் அது எங்கே முடியப் போகிறது?" என்று பெருமூச்சு விட்டாள் பட்டு. அவளுக்கு அலைகளுக்கு அருகே போகவே பயம்.

"உன் ஆசை நிறைவேறுவது அப்படியொன்றும் பெரிய கஷ்டமல்ல. காற்றடைத்த ரப்பர் வளையத்தை இடுப்பில் கட்டிக்கொண்டால் கடல்நீரில் மிதந்து கொண்டிருக்கிறாய். இதற்கு 'லைஃப் பாய்' என்று பெயர்" என்றான் கிட்டு.

"எந்த விதச் சாதனமும் இல்லாமல் கடல் நீரில் கார்க்கைப் போல் மிதப்பதைத்தான் நான் சொல்கிறேன். அது முடியுமா?" என்றாள் பட்டு.

"முடியும்" என்றார் தாத்தா. "உன் ஆசைப்படி நீ கடல் நீரில் மூழ்காமல் மிதந்தபடியே புத்தகம் படித்துக் கொண்டிருக்கலாம். ஆனால் இந்தக் கடலில் அல்ல. அது வேறு ஒரு கடலில். அது இருப்பதும் வேறு ஒரு நாட்டில்" என்றார் தாத்தா.

"என்ன நிஜமாகவா?" என்றார்கள் கிட்டுவும் பட்டுவும் ஏக காலத்தில். வியப்புடன்.

"உண்மை, உண்மை, முக்காலும் உண்மை! அதுமட்டுமல்ல. சுற்றுப்புறங்களில் பனி உறைந்து இருக்கும்போது அந்தக் கடற் கரையில் கதகதப்பாக இருக்கும்! அந்தச் சுகத்தையும் அனுபவிக்கலாம்" என்றார் பரமேசுவரன் தாத்தா.

"அந்தக் கடல் எது, எந்த நாட்டில் இருக்கிறது? இப்போதே அங்கு போக

லாம் கிளம்புங்கள்'' என்றார்கள் கிட்டுவும் பட்டுவும்.

''அவசரப்படாதே. ஏன், பீச்சில் குளிர் தாங்கவில்லையாக்கும்? அதனால் அந்தக் கதகதப்பான கடற் கரைக்குப் போகத் துடிக்கிறாயா?'' என்ற தாத்தா, ''கொஞ்ச நாட்களுக்கு முன்னால் இஸ்ரேலுக்குப் போயிருந்தோ மில்லையா? அந்நாட்டின் கிழக்கெல்லையில் உள்ள கடல் எது நினைவிருக்கிறதா?'' என்று கேட்டார்.

''ஓ! நினைவிருக்கிறதே! டெட் ஸீ—செத்த கடல். சரிதானே?''

''கரெக்ட். அந்தக் கடலில்தான் இந்த அற்புதங்களைக் காணலாம். அந்தக் கடலில் நீ குதித்தால் உன்னால் உள்ளே மூழ்கிப் போக முடியாது. கார்க்கைப் போல் மிதந்து கொண்டிருப்பாய். அது ஒரு விசித்திரமான கடல். கடல் என்பது கூடத் தவறு. நாற்பத்தி ஏழு மைல்கள் நீளமும், ஒன்பது மைல்கள் அகலமும் கொண்ட ஒரு பெரிய ஏரி அது.''

''தாத்தா, என் ஆசை பூர்த்தியாக நாம் இப்போதே அங்கு கிளம்புவோம். எனக்குக் கடல் நீரில் மிதக்க வேண்டும் என்று ரொம்ப நாட்களாக ஆசை'' என்றான் பட்டு. இதற்கு மேல் தாத்தாவினால் சும்மா இருக்க முடியுமா? அவர் கை இடுப்பிலிருந்த மந்திர மெழுகை எடுத்தது.

''கொஞ்சம் மலைப் பகுதியில் நடக்க வேண்டியிருக்கும். அப்புறம் காலை வலிக்கிறது, கையைக் குடைகிறது என்று சொல்லக் கூடாது. இறந்த கடலுக்குப் போவதற்கு நாம் முதலில் ஜெருஸலத்துக்குப் போக வேண்டும்'' என்று கூறியவாறே மந்திர மெழுகை அவர்களின் புருவங்களில் தடவினார் தாத்தா.

அடுத்த விநாடி....

மூவரும் பாலஸ்தீனத்தின் மலைப் பிரதேசத்தில் ஒரு மலைப் பாதையில் நின்று கொண்டிருந்தார்கள். மலைகளிடையே பாதை வளைந்து வளைந்து போய்க் கொண்டிருந்தது.

''நாம் முப்பது மைல்கள் இந்தச் செங்குத்தான மலைகளிடையே உள்ள பாதை வழியே நாலாயிரம் அடிகள் பள்ளத்துக்குப் போயாக வேண்டும்'' என்று கைத்தடியைச் சுழற்றியபடி நடப்பதற்குத் தயாராகி விட்டார் தாத்தா. கிட்டுவும் பட்டுவும் பின்வாங்குவார்களா? தாத்தாவின் இரு பக்கங்களிலும் அவர்கள் அவர் வேகத்துக்கு ஈடு கொடுத்தபடி நடக்கலானார்கள். ''நாம் ஜெருஸலத்துக்குப் போகவில்லை. அங்கு இப்போது யுத்த காலமாதலால் காவல் கடுமையாக இருக்கும். அதோ தெரிகிறதே அதுதான் ஆலிவ் மலை. வழியில் பெதானே (Bethany) கிராமத்தையும், குட் சமாரிடன் வழிப்போக்கர் விடுதியையும் கடந்து போகப் போகிறோம். இவைகளெல்லாம் பைபிளில் வரும் ஊர்கள் என்று தெரியுமல்லவா உங்களுக்கு?'' என்ற தாத்தாவுக்குக் கிட்டுவும் பட்டுவும் ''தெரியும்'' என்று பதில் அளித்தார்கள்.

''ஜூடா (Judea) என்ற கானகப் பகுதியில் ஏசுபிரான் நாற்பது பகலும் இரவும் தங்கியிருந்ததாக வருகிறதே, அதுகூட இந்தப் பகுதியில்தானே இருக்கிறது?'' என்று கேட்டான் கிட்டு.

''அந்தப் பகுதி வழியாகத்தான் இந்த மலைப் பாதை செல்கிறது. கானகப் பகுதி என்றால் இங்கு அடர்ந்த காடுகள் ஏதுமிருக்காது. பொட்டல் வெளிதான். இங்கொன்றும் அங்கொன்றுமாகச் சில மரங்கள் இருக்கும். புல்வெளியைக் காண முடியாது. மாரிக் காலத்து மழைக்குப் பிறகு வஸந்த காலத்தில் சில வாரங்கள் காட்டுப் பூக்கள் திடீரென்று மலரும். ஆனால் சிலநாளைக்கெல்லாம் அவை மறைந்து பழையபடி பொட்டலாகி விடும்'' என்றார் தாத்தா.

பாதை வளைந்து வளைந்து கீழே கீழே போய்க் கொண்டிருந்தது. வீடோ, குடிசையோ எதையுமே காணோம். இரு பக்கமும் பெரிய பெரிய மலைகள் செங்குத்தாக நிமிர்ந்து நின்றன. ஓரிடத்தில் வீதி ஓரத்தில் ஓர் அறிவிப்புப் பலகை. அதில் ''இப்போது நீங்கள் கடல் மட்டத்தில் இருக்கிறீர்கள்'' என்று குறிப்பிட்டிருந்தது. அதைப் பார்த்து வியந்தான் கிட்டு. ''நாம் இருப்பதோ மலை மீது. ஆனால் கடல் மட்டத்தில் இருப்பதாக இங்கு எழுதியிருக்கிறதே! அப்படியானால்...'' என்றான்.



"இறந்த கடலுக்குப் போகும் தூரத்தில் நாம் பாதிதான் கடந்திருக்கிறோம்" என்றார் தாத்தா.

"அப்படியானால் 'டெட் ஸீ' கடல் மட்டத்துக்குக் கீழே பாதாளத்தில் இருப்பதாகச் சொல்லுங்கள்" என்றாள் பட்டு.

"அதே, அதே!" என்றார் தாத்தா கேரள பாணியில். உயர்ந்து நின்ற மலை முகடுகளைப் பார்த்தான் கிட்டு. அங்கே கழுகுகளும் ராஜாளிகளும் கூடு கட்டி இருந்தன. "நீங்கள் அதிர்ஷ்டசாலிகளானால் பாலஸ்தீனத்துச் சூரியப் பறவையைக் காண்பீர்கள்" என்றார் தாத்தா.

"சூரியப் பறவையா? அது எப்படி இருக்கும்?"

"நீண்டு வளைந்த மூக்கு, பச்சை, சிவப்பு, நீலம் இத்தனை வர்ணங்களுடன் கூடிய இறகுகள். பூச்சிகளைப் பிடிக்க அலகிலிருந்து நாக்கை நீட்டும் தவளையைப் போல."

பேசிக் கொண்டே மலைப் பாதையைக் கடந்து மணல் பரப்பான சமவெளிக்கு வந்து சேர்ந்தார்கள். அங்கு பாதை இரண்டாகப் பிரிந்தது. "இடது பக்கப் பாதை ஜெரிக்கோ நகரத்துக்கும் வலது பக்கப் பாதை இறந்த கடலுக்கும் போகின்றன" என்றார் தாத்தா.

பட்டு மூக்கைப் பொத்திக் கொண்டாள். அவள் முகம் சுருங்கியது. "என்னமோ நாத்தமடிக்கிறதே தாத்தா?" என்றாள்.

"டெட் ஸீ கிட்டப் போகப் போக இந்த மணம் இன்னும் கடுமையாக இருக்கும். இப்போதே மூக்கைப் பிடித்துக் கொண்டால் எப்படி?" என்று சிரித்தார் தாத்தா.

"எதனால் இந்த வாசனை?" என்று கேட்டான் கிட்டு.

"கடல் நீரிலிருந்து உப்பு எடுப்பதைப் பார்த்திருக்கிறாயா? உப்பளங்களுக்கு நீங்கள் எங்கே போயிருக்கப் போகிறீர்கள்? குழம்புக்கு உப்பு இல்லை என்று மட்டும் அம்மாவிடம் சண்டை போடத் தெரியும். கடல் நீரை உப்பளம் என்னும் வயல்களில் பாய்ச்சித் தேங்கச் செய்வார்கள். அதிலுள்ள கடல் நீர் சூரிய வெப்பத்தால் ஆவியாகக் கீழே உப்பு தங்கும். இப்படித்தான் உப்புத் தயாரிக்கப்படுகிறது.

"செத்த கடல் ஓரப் பகுதிகளிலும் இதே போல் உப்பளங்கள் உண்டு. அந்த நீர் ஆவியாகும்போதுதான் இப்படி உங்கள் மூக்கைத் துளைக்கும் மணம்

ஏற்படுகிறது. இங்குள்ள உப்பளங்களின் அடியில் தங்குவது விலைமதிப்புள்ள உப்புக்களான புரோமைனும், பொட்டாசியமும். டெட் ஸீயில் இந்த உப்புக்கள் ஏராளமாக இருக்கின்றன.''

செத்த கடல் அருகே வந்தார்கள் மூவரும். பட்டுவின் கண்கள் வியப்பால் விரிந்தன. ''அதோ'' என்று சுட்டிக் காட்டினாள். அங்கே ஓர் ஐரோப்பியர் கடல் நீரில் கால் நீட்டிப் படுத்துக் கொண்டிருந்தார், மிதந்தபடி. ஜலஸ்தம்பம் செய்பவர்கள் இப்படித்தான் மிதப்பார்கள் என்று கேள்விப் பட்டிருக்கிறாள். தோளில் குடையைச் சாய்த்துக் கொண்டு ஒரு புத்தகத்தைச் சுவாரசியமாகப் படித்துக் கொண்டிருந்தார் அவர். பட்டு விரும்பியதும் இப்படி மிதப்பதைத்தானே?

தாத்தா விளக்கினார். ''இந்தக் கடலில் அளவுக்கு அதிகமாக உப்புக்கள் ஏராளமாக இருப்பதால்தான் அவரால் மூழ்காமல் இப்படி அநாயாசமாக மிதக்க முடிகிறது. இந்த நீரில் உங்களால் நீந்த முடியாது. நீந்த வேண்டிய தேவையும் இல்லை. கால்கள் நீருக்குள் வேகமாகப் போகாது. உங்கள் உடலை இந்தக் கடல் நீர்மேல் நோக்கி உமிழும். நீங்கள் கார்க் போல மிதப்பீர்கள். அவர் கொளுத்தும் வெய்யிலிலிருந்து தப்பக் குடையும் பிடித்துக் கொண்டு கடல் நீரில் மிதக்கிறார்.

''கோடையில் இங்கு தாங்க முடியாத வெப்பம் இருக்கும். பூமியில் கடல் மட்டத்துக்கு மிக மிகக் கீழே உள்ள இடம் இதுதான். கடல் மட்டத்திலிருந்து 1300 அடிகள் கீழே உள்ளது இக்கடல். இதன் பக்கங்களில் உள்ள மலைகள் வெப்பத்தைத் தாங்கிக் கொள்ளுகின்றன. ஒரு மலை ஆறு மைல் நீளமும், பல நூறு அடிகள் உயரமும் உள்ளது. மலை உப்பு என்று கேள்விப் பட்டிருக்கிறீர்களா? இங்குள்ள மலைகள் உப்பினாலேயே ஆனவை. ஐரோப்பியர்களுக்குச் சாப்பாட்டு உப்பு இந்த மலைகளிலிருந்துதான் போகின்றன. ஐரோப்பியர்களின் தோட்டங்களுக்குத் தேவையான ரசாயன உரத்துக்கான உப்புகளும் இந்தக் கடலிலிருந்துதான் போகின்றன.

''இதற்குச் 'செத்த கடல்' என்று ஏன் பெயர் வந்தது தெரியுமா? இதன் நீரில் எந்த ஜீவராசியும் வாழ முடியாது. இதில் மீன்களோ வேறு பூச்சிகளோ கிடையாது. இதன் கரையை அடுத்து ஒரு மைல் தொலைவுக்கு எந்தத் தாவரமும் முளைக்காது. அதனால்தான் இதற்கு இறந்த கடல் என்று பெயர்.

''ஜோர்டான் நதி இக்கடலில் ஏராளமான நீரைக் கொண்டு வந்து கொட்டுகிறது. அதில் வரும் மீன்கள் இக்கடலுக்குள் விழுந்ததும் இறந்துவிடுகின்றன. ஒவ்வொரு நாளும் 80,00,000 டன் தண்ணீர் இந்தக் கடலிலிருந்து ஆவியாகிறது என்றால் இங்கு எவ்வளவு வெப்பமாக இருக்கும்? ஜோர்டான் நதி எவ்வளவு தண்ணீரைக் கொண்டு வந்து கொட்டும் என்பதைக் கற்பனை செய்து பார்.


''இந்தக் கடல் நீரில் குளிக்கும்போது கடல் நீர் கண்களுக்குள் போகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் கண்களில் உப்புக்களினால் எரிச்சல் ஏற்படும். வாய்க்குள்ளும் போகாமல் பார்த்துக் கொள். அதன் ருசியை உன்னால் தாங்க முடியாது. இன்னொரு எச்சரிக்கையும் கூட. இந்தக் கடல் நீரில் குளித்ததும் கரைக்கு வந்து சுத்த நீரில் ஸ்நானம் செய்ய வேண்டும். இல்லாவிட்டால் உடலெல்லாம் உப்புப் பொடி படிந்திருக்கும்'' என்றார் தாத்தா.

கிட்டுவும் பட்டுவும் கடல் நீரில் குளிக்க — இல்லை மிதக்கத் தயாரானார்கள். தாத்தாவும் பகவத் கீதையுடன் (கடல் நீரில் மிதந்தபடி படிக்க) கடல் மிதப்புக்குக் கிளம்பினார்.

''சந்திர ஒளியில் இங்கு குளிப்பதை ரொம்பப் பேர் விரும்புவார்கள். ஏனென்றால் இதன் நீர் ரொம்பவும் ஜில்லென்று இருக்கும். இதற்கு 'டெட் ஸீ' செத்த கடல் என்று பெயர் இருந்தாலும் இது ஓர் அழகான ஏரி. இதன் நீரில் நீல வானம் அழகாகப் பிரதிபலிக்கும். இதில் உள்ள உப்புக்களால் இதன் நீர் வைரங்களைப் போல மினுமினுக்கும். உலகில் எந்த இடத்தையும் விட இங்குள்ள காற்றில் பிராணவாயு ஏராளமாக இருப்பதால் இது ஆரோக்கியத்துக்கு மிகமிக ஏற்ற இடம்.

''மாரிக்காலத்தின் குளிரைத் தவிர்க்கப் பிரயாணிகள் இங்கு ஏராளமாக வருகிறார்கள். இங்கிருந்து முப்பது மைலில் உள்ள ஜெருஸலத்தில் உறை பனி மூடிக் கிடக்கும்போது செத்த கடலில் சூரிய வெப்பத்தையும் கதகதப்பையும் ஆனந்தமாக அனுபவித்துக்கொண்டிருக்கலாம். அப்படிப்பட்ட அதிசயமான இடம் இந்தச் செத்த கடல் பிரதேசம். வாருங்கள் மிதக்கப் போகலாம்'' என்று கடலுக்குள் கால் வைத்தார் பரமேசுவரன் தாத்தா. கிட்டுவும் பட்டுவும் அவரைப் பின் தொடர்ந்தார்கள்.


ஜெய ஹனுமான்
கதை: ரா. கணபதி
சித்திரம்: வினு
④
அஞ்சனையின் குமாரனுக்கு ஆசிகள் வந்து குவிகின்றன.
என் ஒளியில் ஒரு பங்கை இக்குழந்தைக்கு அளிக்கிறேன். நானே ஆசானாக இருந்து சகல கலைகளையும் கற்பிக்கிறேன்.
நீரினால் இக்குழந்தைக்குத் துன்பம் ஏற்படாது. என் அஸ்திரமான வருணாஸ்திரத்தாலும் அழிவு ஏற்படாது.
இந்திரன் இவனை ஹனுமனாக்கினான். அஞ்சனையின் மைந்தனானதால் 'ஆஞ்சநேயன்' என்றும், மாருதியான வாயுவின் குமாரனானதால் மாருதி எனவும்.....
பிற்காலத்தில் யாராலும் வெல்லமுடியாத வீரனாக விளங்கப் போவதால் 'மகாவீர்' எனவும் ஆசைகளை வென்று அடக்கிய ஞானியாக விளங்கப் போவதால் 'ஜிதேந்திரியன்' எனவும்..
தான் விரும்பிய எந்த வடிவத்தையும் எடுத்துக் கொள்ளும் சக்தியை இவனுக்கு அளிக்கிறேன். ஆகவே 'காமரூபா' எனவும் இக்குழந்தை அழைக்கப்படுவானாக.
ஜய விஜயீ பவ...!


குழந்தையைக் காணாது தவித்துக்கொண்டிருந்த அஞ்சனையிடம் வருகிறார் வாயு பகவான்.
அஞ்சனை, அஞ்சாதே! இதோ உன் குழந்தை!
பிராணேசா! உங்கள் விருப்பப்படியே வாயுவின் அருளால் அழகான குழந்தையைப் பெற்று வந்துள்ளேன். இந்தாருங்கள்.
குழந்தை வளர்ந்து, கல்வி கற்க வேண்டிய பருவம் வந்ததும்...
ஆஞ்சநேயா! வா, வா! வாக்குப்படி நானே உனக்குக் குருவாக இருந்து கலைகளைக் கற்பிக்கிறேன்.
இரண்டாவது முறையாகச் சூரியனை நோக்கித் தாவினார் வாயுகுமாரர்.
மாருதி! என் வேகத்துக்கு என்னோடு வருவாயா? நான் சொல்லச் சொல்ல நீ கிரகித்துக் கொள்ள வேண்டும்.
வருகிறேன் - உங்கள் முகம் பார்த்தபடி பின்னோக்கியே வருவேன்.
நான்கு வேதங்கள் ஆறு சாஸ்திரங்கள் ஒன்பது இலக்கணங்கள் அறுபத்தி நான்கு கலை ஞானங்கள் அத்தனையும் கற்றுத் தேர்ந்தார் அனுமார். ஒரு தடவை கேட்டாலே போதும், மனப்பாடமாகிவிடும் வல்லமை பெற்றவர் வாயுகுமாரர்.
தொடரும்

குட்டிச் சிதம்பரனார் ஆகுக!

கப்பல் ஓட்டிய சிதம்பரனார்—சிறைக்
காவலில் இருந்தார் ஒருசமயம்
ஒப்பில் லாத வீரரவர் — ஒரே
ஒன்றிற் காக மனம்நொந்தார்

சின்னஞ் சிறிய தம்மகனின் — எழில்
சித்திரம் மனதில் வந்ததனால்
கண்கள் கலங்கிப் போய்விட்டார்-எந்தக்
கவலையும் பெரிதாய் எண்ணாதார்.


கடிதம் ஒன்று வந்ததென — ஒரு
காவலன் தந்தான் அந்நேரம்
படபடப் பாகப் பிரித்ததனை — அவர்
படித்துப் பார்த்தார் முகம்மலர.

அதனை எழுதி அனுப்பியவர் — அவர்
மனைவி; அதிலே இருந்ததுவும்
இதுவே: ''பாரதி வந்திருந்தார் — நம்
செல்வனைத் தட்டிக் கொடுத்தணைத்தார்.

'பேசடா குட்டிச் சிதம்பரமே—தந்தை
பேரை விடவும் பெரும்பெயரை
பேசி வெல்லல் வேண்டுமடா'—என்றார்;
பின்னை ''நிச்சயம்'' எனச்சொன்னான்

படித்தே நிமிர்ந்த தமிழ்வீரர் — கவலை
பறந்தெங் கேயோ ஓடியது
துடித்த கைகள் மீசையினை — மேலே
தாண்டி முறுக்கி விட்டனவாம்.

'அழகி'





ஜவாஹர் ஹைஸ்கூலில் இடைவேளை மணி அடித்தது. சங்கரும் ரமேஷும் தங்கள் உணவுப் பொட்டலங்களை எடுத்துக்கொண்டு ஒரு மரத்தடியை அடைந்தனர். சங்கரும் ரமேஷும் உயிர்த் தோழர்கள். இருவரும் எப்போதும் சேர்ந்தே காணப்படுவார்கள்.

''சங்கர்! உன்கிட்டே தனியாகச் சொல்லணும் என்றுதான் 'வெயிட்' பண்ணிக் கொண் டிருக்கிறேன். சண்முகத்தைப் போலீஸ் 'சஸ்பெக்ட்' பண்ணுறாங்கடா. சங்கர், எனக்கு நிச்சயமாகத் தெரியும், அவன் திருடவில்லை என்று'' என்றான் ரமேஷ்.

ரமேஷ் வீட்டில் சனிக்கிழமை இரவு திருட்டுப் போய் விட்டது. சுமார் பதினைந்தாயிரம் ரூபாய் மதிப்புள்ள நகைகள் போய்விட்டன. திங்கள் கிழமை அவன் பள்ளிக்கூடத்துக்கு வந்ததும் யாவரும் அதைப் பற்றிக் கேள்வி மேல் கேள்வி போட்டு அவனைத் திணற அடித்து விட்டனர். சண்முகம் ரமேஷின் வீட்டு வேலைக்காரன். ரமேஷுக்கு மிகவும் பிடித்தமானவன்.

சங்கர் கேட்டான்: ''ஏண்டா சண்முகத்தைச் சந்தேகப்படறாங்க?''

''அதைச் சொல்வதற்கு முன்னால், திருட்டு எப்படி நடந்தது என்று உனக்குச் சொன்னால்தான் புரியும்.''

''சொல்லுடா, ரமேஷ்!'' என்று ஆவலுடன் கேட்டான் சங்கர்.

''இரண்டு நாட்கள் முன்பு அதாவது சனிக்கிழமை மத்தியானம் எங்கம்மா, எங்கப்பா, என் தங்கை பிரபா, நான் நான்கு பேரும் காரில் பக்கத்து ஊரில் இருக்கும் எங்கள் அத்தை வீட்டுக்குப் போயிருந்தோம். சண்முகம்தான் வீட்டுக்குக் காவல். வேலைக்காரியை வர வேண்டாம் என்று சொல்லிவிட்டோம். வராந்தாவையும், கார் ஷெட்டையும் மட்டும் சண்முகத்துக்குத் திறந்து வைத்து விட்டுப் பாக்கி எல்லா இடங்களையும் பூட்டிக் கொண்டு போயிருந்தோம். இந்த மாதிரி எத்தனையோ தடவைகள் போயிருக்கிறோம். ஒரு தடவை கூட......''

''சாவியை எடுத்துக் கொண்டு தானே போனீர்கள்?'' என்று இடைமறித்தான் சங்கர்.

''ஆமாம், எடுத்துக் கொண்டுதான் போனோம். ஹால் கதவு, மாடிக் கதவு, மாடி அறைகள், இரும்புப் பீரோ எல்லாவற்றையும் பூட்டி யிருந்தோம். நாங்கள் எடுத்துக் கொண்டு போன சாவிக் கொத்துக்கு 'டூப்ளிகேட்' சாவிக் கொத்து ஒன்று எங்கள் வீட்டுத் தையல் மெஷின் டிராயரில் இருந்தது.''

சங்கரன் துப்பறிகிறான்

பாலம் சுந்தரேசன்



''தையல் மெஷின் டிராயர் பூட்டியிருந்ததா?''

''இல்லேடா, சங்கர். எங்கம்மா சாவிக் கொத்தை டிராயரில் போட்டால் ஒருவராலும் கண்டுபிடிக்க முடியாது என்று நினைத்து விட்டாள். இதற்காக எங்கப்பா கூட எங்கம்மாவைத் திட்டினர்.''

''சரி, திருட்டு எப்படி நடந்தது என்று சொல்லு'' என்று ஆவலுடன் கேட்டான் சங்கர்.

''சனிக்கிழமை இரவு திருடன் வந்து பூட்டுக்களைத் திறந்து இரும்பு பீரோவில் இருந்த நகைகளை எடுத்துக் கொண்டு போய் விட்டான். சண்முகம் இரவு நன்ருகத் தூங்கி விட்டதாகக் கூறுகிருன். காலையில் எழுந்ததும் கதவுகள் திறந்து கிடப்பதைப் பார்த்துச் சத்தம் போட்டிருக்கிருன். அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் வந்து போலீஸுக்கு ஃபோன் செய்தார்களாம். பிறகு எங்களுக்குத் தகவல் வந்து நாங்கள் வந்தோம்.''

''இரவு திருடன் பூட்டைத் திறக்கும் போதும் கதவைத் திறக்கும்போதும் கொஞ்சமாவது சத்தம் கேட்டிருக்குமே?'' என்ருன் சங்கர்.

''போலீஸ் சண்முகத்தின் மீது சந்தேகப்படுவதற்கு அதுதான்டா முதல் காரணம்.''

''இன்னும் என்ன என்ன காரணங்கள் இருக்கின்றன.?'' என்று வினவினன் சங்கர்.

''இரண்டாவது காரணம் சாவிக் கொத்து தையல் மிஷின் டிராயரில் இருந்தது அவனுக்குத் தெரியும். வேறு ஒருவருக்கும் தெரிந்திருக்க முடியாது. மூன்ருவது, மாடிப் படிகளிலும் மாடிப் படுக்கை அறையிலும் சில காலடி அடையாளங்கள் இருந்தன. அவை சண்முகத்தின் செருப்பின் அளவுக்குச் சரியாக உள்ளனவாம். இவற்றையெல்லாம் வைத்துக் கொண்டு சப் இன்ஸ்பெக்டருக்குச் சண்முகத்தின் பேரில் சந்தேகம் வந்து விட்டது. சண்முகத்தின் நல்ல குணம் எனக்குத் தெரியாமல் இருந்தால் நான்கூட அவன் மேல் சந்தேகப்பட்டிருப்பேன்'' என்ருன் ரமேஷ்.

இதற்குள் சாப்பிட்டு விட்டு இருவரும் கை கழுவிக் கொள்ளக் குழாயை நோக்கி நடந்தனர்.

''ரமேஷ்! சண்முகத்தை 'அரெஸ்ட்' பண்ணிட்டாங்களா?''

''இன்னும் இல்லே. ஆனல் சண்முகத்தை எங்கும் போக வேண்டாம் என்று சொல்லியிருக்கிருர் சப் இன்ஸ்பெக்டர்'' என்ருன் ரமேஷ்.

இதற்குள் மணி அடித்து விடவே, இருவரும் வகுப்புக்கு விரைந்தனர். சாயங்காலம் மணி அடிக்கும்வரை சங்கர் இந்தத் திருட்டைப் பற்றியே நினைத்துக் கொண்டிருந்தான். மணி அடித்ததும் வழக்கம் போல் ரமேஷும் சங்கரும் ஒன்ருக வீட்டுக்குப் போகக் கிளம்பினர்கள்.

சங்கர்தான் பேச்சை ஆரம்பித்தான்.

''ரமேஷ்! நீ சண்முகம் திருடியிருக்கமாட்டான் என்று நிச்சயமாகச் சொல்கிருய். அப்படியானல் திருடன் யாராக இருக்க முடியும் என்று நினைக்கிருய்?'' என்று கேட்டான்.

ரமேஷினல் அப்படி யாரையும் கூற முடியவில்லை. ஆகவே சங்கரே தொடர்ந்தான். ''ரமேஷ்! முதலாவது, திருடன் உங்கள் வீட்டைப் பற்றிய விவரங்களை அறிந்தவனக இருக்க வேண்டும். ஏனெனில், நீங்கள் அத்தை வீட்டுக்குப் போனது, சண்முகம் மட்டும் வீட்டுக்குக் காவலாக இருந்தது, இவை அனைத்தும் அவனுக்குத் தெரிந்திருக்க வேண்டும். இரண்டாவது, சாவிகள் தையல் மிஷின் டிராயரில் இருப்பது திருடனுக்குத்தெரிந்திருக்க வேண்டும். அல்லது சாவிக் கொத்து எப்போதாவது அவன் கையில் கிடைத்து அவன் அவற்றுக்கு 'டூப்ளிகேட்' தயாரித்திருக்க வேண்டும்'' என்று சொன்னதும், ரமேஷ், ''பார்த்தாயா, சங்கர்! சொல்ல மறந்துவிட்டேனே! 'டூப்ளிகேட்' சாவிக் கொத்தையும் காணும். நாங்கள் ஊருக்குப் போகும் முன் அது இருக்கிறதா என்று பார்க்கவில்லே'' என்ருன்.

''அதனல் அது முன்னமேயே காணமல் போயிருக்கலாம் இல்லேயா?''

''ஆமான்டா, நீ சொல்வது சரிதான்.''

''அந்த மாதிரி யாராவது உங்கள் வீட்டுக்குத் தெரிந்தவன் இருக்கிருன? வேலேக்காரி, அவள் புருஷன்...''

''யாரு? கண்ணம்மா புருஷன் பழனியா? இருக்கவே முடியாது. கண்ணம்மா எங்கள் வீட்டில் பத்து வருஷங்களாக வேலே செய்கிருள். பழனியையும் எங்களுக்கு நன்ருகத் தெரியும். சரியான மண்டு'' என்று சிரித்தான் ரமேஷ்.

''அப்படியானல் அவனக இருக்க முடியாது. ரமேஷ்! இந்தத் திருட்டைச் செய்தவன் முட்டாள் இல்லே. ஏன் தெரியுமா? சண்முகத்தின் மேல் சந்தேகம் வரும்படி செய்திருக்கிருன். அதனல் இந்தத் திருடன் ரொம்பத் திறமைசாலி!''

''சங்கர்! எங்கள் தெருவுக்குப் பக்கத்துத் தெருவில் டாக்டர் ராவ் வீட்டில் போன மாதம் திருட்டுப் போச்சே தெரியுமில்லையா? இந்த மாதிரிதான் அவர்கள் வீட்டு வேலைக்காரன் மேல் சந்தேகப்பட்டு அவனைக் கைது செய்து விட்டார்கள். அதுபோல் சண்முகத்தையும் ஜெயிலில் போட்டு விடுவார்களோ என்னவோ, பாவம்'' என்று வருத்தப்பட்டான் ரமேஷ்.

''வாடா, ரமேஷ், சண்முகத்தைக் கேட்டுப் பார்க்கலாம். அவனுடைய நண்பன் யாராவது செய்திருக்கலாம் அல்லவா?''

''சண்முகத்துக்கு எல்லோருடைய வீட்டு டிரைவர்களும் வேலைக்காரர்களும் சிநேகிதம்'' என்றான் ரமேஷ்.

இருவரும் ரமேஷின் வீட்டை அடைந்தார்கள். சண்முகம் தோட்டத்தில் எதையோ கொத்திக் கொண்டிருந்தான். அவன் முகம் வாடியிருந்தது.

''நான் திருடவே யில்லை, ரமேஷ்!'' என்று கண்களில் நீர் மல்கக் கூறினான் சண்முகம்.

''அதை நாங்க நம்பறோம், சண்முகம்! உன்மேல் இருக்கும் பழி நீங்கணும் என்றால் நீ எல்லா விஷயங்களையும் ஒன்று கூட விடாமல் எங்களிடம் கூறு'' என்று அன்புடன் கூறினான் சங்கர். அவன் மனத்துக்குள் எப்படியாவது உண்மைத் திருடனைக் கண்டுபிடித்துவிட வேண்டும் என்ற ஆர்வம் பொங்கி எழுந்து கொண்டிருந்தது.

''சனிக் கிழமை இரவு நான் நல்லாத் தூங்கி விட்டேனுங்க. என்னமோ தெரியலை, ஒரே தூக்கமாக வந்தது. காலையிலே முழிச்சுக்கிட்டுப் பார்த்தா வீடு திறந்து கிடந்தது. நான் அஜாக்கிரதையாத் தூங்கிட்டதாலேதான் இந்தத் திருட்டு நடந்தது என்று நான் புலம்பிக்கிட்டு இருந்ததைப் பார்த்து, எல்லோரும் நானே திருடன் என்று நினைச்சுட்டாங்க. ஐயாவும் அம்மாவும் ஒண்ணும் சொல்லலை. இருந்தாலும் அவங்க முகத்தைப் பார்க்கவே எனக்குக் கூசுதுங்க. இன்ஸ்பெக்டர் ஐயா என்னைச் சந்தேகப் படறாரு'' என்று வருத்தத்துடன் கூறினான் சண்முகம்.

''அது சரி, சண்முகம்! சனிக்கிழமையன்று அவங்க ஊருக்குப் போகிறது உன் நண்பர்கள் யாருக்காவது தெரியுமா?'' என்று கேட்டான் சங்கர்.

''மாணிக்கமும், அந்தோணியும் மத்தியானம் வந்தப்போ சொன்னேனுங்க. மாணிக்கம் நாயுடு வீட்டு டிரைவரு, அந்தோணி சினிமா நடிகை சசிகலா வீட்டு வேலைக்காரனுங்க''.

''சரி, ரமேஷ் திருட்டு நடந்த அறையைப் பார்க்கலாம் வா'' என்றான் சங்கர்.

மாடியில் உள்ள ஒரு விசாலமான அறைக்குச் சங்கரை ரமேஷ் அழைத்துச் சென்றான். நடுவில் இரண்டு கட்டில்கள் போடப்பட்டிருந்தன. ஒரு மூலையில் ஒரு பெரிய இரும்புப் பீரோ இருந்தது. அதிலிருந்துதான் நகைகள் திருட்டுப் போயிருந்தன. அறையின் கதவின் பக்கமாக இருந்த சுவரை ஒட்டித் தையல் மெஷின் இருந்தது. அதன் சிறிய டிராயரிலிருந்துதான் 'டூப்ளிகேட்' சாவிக் கொத்து காணாமல் போயிருந்தது. பெரிய ஜன்னல் ஒன்று கம்பிகள் போடப்பட்டுக் கதவுக்கு எதிர்ப் பக்கத்தில் இருந்தது.

சங்கர் ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தான். குழாய் ஒன்று மொட்டை மாடியிலிருந்து கீழ்வரைக்கும் சென்றிருந்தது.



''ரமேஷ்! இந்தக் குழாயைப் பார்த்தியாடா! திருடன் இதன் வழியாகச் சுலபமாக மேலே ஏறி வரலாம். ஜன்னல் வழியாகக் கூடச் சாவிக் கொத்தைத் திருடியிருக்கலாம்'' என்றான் சங்கர்.

''ஆனால் சங்கர், ஜன்னலில் கம்பிகள் இருக்கின்றன. தவிர, தையல் மெஷின் ஜன்னலிலிருந்து பத்தடி தூரமாவது இருக்கும்போலிருக்கே.''

சங்கர் சற்று யோசித்து விட்டுத் திடீரென்று குதித்தான். ''ஐடியா ரமேஷ்!'' என்று கத்தினான்.

''என்னடா ?'' என்று ஆவலுடன் கேட்டான் ரமேஷ்.

''ரமேஷ்! ஒரு பத்தடி நீளக் கம்பு, அதன் நுனியில் ஒரு நல்ல காந்தம். அவ்வளவுதான் தேவை சாவிக் கொத்தை எடுப்பதற்கு.''

''சங்கர், நீ ஜீனியஸ்டா!'' என்று சங்கரின் தோளை அணைத்துக்கொண்டான் ரமேஷ்.

சங்கர் மேலும் கூறினான்: ''மாணிக்கம், அந்தோணி என்ற இருவரைப் பற்றிச் சண்முகம் கூறினான் அல்லவா? அவர்கள் இருவரில் ஒருவர் திருடியிருக்கலாம்.''

ரமேஷுக்குச் சந்தேகம் வந்துவிட்டது. ''இந்த டிராயரில் சாவிக் கொத்து இருக்கும் என்று அவர்களுக்கு எப்படித் தெரிந்திருக்க முடியும்?''

''மாணிக்கத்துக்குத் தெரிந்திருக்க வழியிருக்கிறது!'' என்ற குரலைக் கேட்டு ரமேஷும் சங்கரும் திடுக்கிட்டனர். ரமேஷின் அம்மா கதவருகில் நின்று கொண்டிருந்தாள்.

''நீங்கள் பேசிக் கொண்டிருந்ததையெல்லாம் கேட்டேன். எனக்கும்



மாணிக்கத்தின் மேல் சந்தேகம் வந்துவிட்டது'' என்று புன்னகை செய்தாள் அம்மா.

''மாமி! சாவிக் கொத்து இருக்குமிடம் மாணிக்கத்துக்கு எப்படித் தெரிந்திருக்க முடியும்?'' என்று ஆச்சரியத்துடன் கேட்டான் சங்கர்.

''ஒரு மாதத்துக்கு முன்னால் ரமேஷின் அப்பா ஆபீஸ் விஷயமாக வெளியூர் போயிருந்தார். ஒரு வாரம் ஆகியிருந்தது. எனக்கு அன்று வெளியே போக வேண்டியிருந்தது. நாயுடு ரமேஷின் அப்பாவுக்கு மிக வேண்டியவராதலால் அவரது டிரைவருக்குச் சொல்லி அனுப்பினேன். அன்று நாயுடுவின் டிரைவர் மாணிக்கம்தான் எனக்குக் கார் ஓட்டினான். என்கூடப் பிரபாவும் வந்தாள். சாவிக் கொத்தை வழக்கம் போல் 'ஹாண்ட் பாக்'கில் எடுத்துக் கொண்டு போய் விட்டேன். அன்று தான் ரமேஷின் அப்பா திரும்பி வருவதாகச் சொல்லியிருந்தார். காரில் போகும்போது பிரபா கேட்டாள், 'அம்மா! அப்பா வந்தால் என்ன செய்வார்? நீ சாவிக் கொத்தை எடுத்துக் கொண்டு வந்து விட்டாயே' என்று. நானும் யோசிக்காமல், முட்டாள்தனமாக, 'தையல் மிஷின் டிராயரில் டூப்ளிகேட் சாவிக் கொத்து இருக்கிறதே' என்று கூறிவிட்டேன். பிரபா விடாமல் 'தையல்மெஷின் மாடி படுக்கை அறையில்தானே இருக்கிறது, நீ மாடிக் கதவையே பூட்டி விட்டாயே?' என்றாள். நாங்கள் திரும்புவதற்குள் பிரபாவின் அப்பா திரும்பி வந்து விடக் கூடாதே என்று வேண்டிக் கொண்டேன். நீங்கள் இப்போது பேசிக் கொண்டதைக் கேட்டதும் எனக்கு இந்த விஷயம் ஞாபகத்துக்கு வந்தது. அதனால்தான் மாணிக்கத்துக்கு இந்த விஷயம் தெரிந்திருக்கும் என்று சொல்லுகிறேன்'' என்று கூறி முடித்தாள் அம்மா.

''ரமேஷ்! மாணிக்கம் திருடியிருக்க வாய்ப்பு இருக்குடா! நீங்கள் ஊருக்குப் போகும் விஷயத்தை மாணிக்கம் சண்முகத்திடமிருந்து அறிந்திருக்கிறான். சாவிக் கொத்து இருக்குமிடம் அவனுக்குத் தெரியும். சண்முகத்தின் செருப்புகளின் காலடி அடையாளங்கள் இருந்தன அல்லவா, அவற்றை மாணிக்கம் சண்முகத்தின் செருப்புக்களைக் கொண்டே உண்டாக்கியிருக்க முடியும். என்ன மாமி?'' என்று ரமேஷின் அம்மாவைக் கேட்டான் சங்கர்.

சங்கரின் அபார மூளையைக் கண்டு ரமேஷுக்கு ஓரே வியப்பு — ஏன்? அம்மாவுக்கும் கூடத்தான்.

''அம்மா! சண்முகம் நிரபராதி அம்மா. இப்பவே போய் இன்ஸ்பெக்டர்கிட்டே சொல்வோம்'' என்று துடித்தான் ரமேஷ்.

''மாமி! அதற்கு முன் சண்முகத்தை ஒரு கேள்வி கேட்க விரும்புகிறேன்'' என்றான் சங்கர் பெரிய துப்பறியும் புலி போன்ற தோரணையில். ரமேஷ் ஓடோடிச் சென்று சண்முகத்தை அழைத்துக் கொண்டு வந்தான்.

''சண்முகம்! நீ நன்றாக யோசித்துச் சொல். சனிக் கிழமை இரவு நீ என்ன சாப்பிட்டாய்?'' என்று கேட்டான் சங்கர்.

''பிரியாணிங்க,'' நாயுடு வீட்டு டைவரு மாணிக்கம் இல்லீங்க, அவன் தானுங்க வாங்கியாந்து கொடுத்தான்.

வழக்கமாக நானே சமைத்துக் கொள்வேன். அன்னிக்கு மத்தியானம், மாணிக்கமும் அந்தோணியும் வந்தாங்க இல்லே, அப்ப மாணிக்கம் 'ஏண்டா, எப்பவும் சோறும் குளம்பும் துண்றே, நான் பிரியாணி வாங்கிட்டு வரேன்' என்றான். குமார் எட்டு மணிக்கு எனக்கு ஒரு பொட்டலம் பிரியாணி வாங்கிக் கொடுத்துட்டுப் போனானுங்க.''

ரமேஷ், அம்மா, சங்கர் மூவரும் வியப்புடன் ஒருவரை யொருவர் பார்த்துக்கொண்டனர்.

''சண்முகம்! நீ இதை இன்ஸ்பெக்டர் கிட்டே சொல்லல்லியா?''

''இல்லீங்க, மாணிக்கம் தான் வந்ததை ஒருவரிடமும் சொல்லவேண்டாமுன்னு சொன்னானுங்க. நாயுடுக்குத் தெரியாமல் வந்ததாகவும் அவருக்குத் தெரிந்தால் வேலே போயிடும் என்று சொன்னானுங்க.''

''மாணிக்கம் நல்லா சண்முகத்தை ஏமாத்திச் சாப்பாட்டிலேயும் மயக்க மருந்தைக் கலந்து கொடுத்திருக்கிறான்'' என்றான் சங்கர்.

''நாம் எப்படியாவது சண்முகத்தைக் காப்பாத்தணும் அம்மா!'' என்று ரமேஷ் அம்மாவைக் கட்டிக் கொண்டு கெஞ்சினான்.

''சரி, வாங்க, டிஃபன் சாப்பிட்டுக் கொண்டே அப்பாவிடம் சொல்லலாம்'' என்றாள் அம்மா.

அனைவரும் கீழே சென்றனர்.

அடுத்த அரை மணியில் ரமேஷின் அப்பா கார் ஓட்ட யாவரும் போலீஸ் ஸ்டேஷனை அடைந்தனர். ரமேஷின் அப்பாவிடம் சங்கர் எல்லாவற்றையும் விவரமாகக் கூறியிருந்தான். ரமேஷின் அப்பா சங்கர் கூறியவற்றை சப்-இன்ஸ்பெக்டர் ராஜாராமிடம் விளக்கினார். ராஜாராம் எல்லாவற்றையும் பொறுமையாகக் கேட்டார்.

''வெல்டன், சங்கர்! மாணிக்கம் குற்றவாளியா இல்லையா என்பதைக் கண்டுபிடிக்க ஒரு நிச்சயமான வழி இருக்கிறது. நீங்கள் யாவரும் சண்முகம் நிரபராதி என்று நினைக்கிறீங்க. சரி, இனிமேல் இதை நான் கவனிச்சுக்கிறேன். நாளை மாலை ஆறு மணிக்கு உங்கள் வீட்டுக்கு வருகிறேன். நீங்க இப்ப போய் வாங்க'' என்று கூறி அவர்களை அனுப்பி வைத்தார் சப்-இன்ஸ்பெக்டர். சங்கரை அவன் வீட்டில் கொண்டு போய் விட்ட ரமேஷின் அப்பா சங்கரின் அப்பாவைச் சந்தித்து எல்லாவற்றையும் விவரமாகக் கூறினார். சங்கரின் அப்பாவுக்குப் பெருமையாக இருந்தது.

மறுநாள் மாலை ரமேஷின் வீட்டில் அவன் குடும்பத்தினர், சண்முகம், சங்கர், சங்கரின் பெற்றோர் யாவரும் கூடியிருந்தனர். சரியாக ஆறு மணிக்கு மோட்டார் சைக்கிளில் சப்-இன்ஸ்பெக்டர் ராஜாராம் வந்து இறங்கினார். மிகுந்த ஆவலுடன் யாவரும் இன்ஸ்பெக்டரை நோக்கினர்.

'' சந்தேகமில்லாமல் மாணிக்கம் தான் குற்றவாளி என்று நிருபணமாகிவிட்டது'' என்றார் சப்-இன்ஸ்பெக்டர்.

கூடியிருந்தவர்கள் அனைவரும் வியப்பு, சந்தோஷம் ஆகிய உணர்ச்சிகளால் திணறினர்கள்.

'' திருட்டு நடந்த இடத்தைச் சோதனை போடறப்போ, கிடைத்த துப்



புகள் பல சண்முகத்தைக் குற்றவாளி எனக் காட்டினாலும் இரண்டு விஷயங்கள்தான் ஒத்து வரவில்லை. திருடன் சாமர்த்தியமாக எல்லா ரேகைகளையும் அழித்து விட்டிருந்தான். ஆனால் திருட்டு நடந்த அறையில் பீரோவின் அடியில் சற்று உள்ளே ஒரு சீப்பு கிடந்தது. அதில் புதிதான கைரேகைகள் பல இருந்தன. அந்தச் சீப்பு உங்களுடையது இல்லை என்று நீங்கள் கூறிவிட்டீர்கள். சண்முகத்துக்கோ சீப்பே தேவையில்லை'' என்று பெரிதாகச் சிரித்தார் இன்ஸ்பெக்டர்.

யாவரும் சிரித்து விட்டனர். காரணம் சண்முகத்தின் மொட்டைத் தலை தான். சண்முகமும் அசடு வழியச் சிரித்துக் கொண்டே தன் தலையைத் தடவிக் கொண்டான்.

''இதனால்தான் சண்முகத்தைக் கைது செய்யத் தயங்கினேன். வேலைக்காரி கண்ணம்மா புருஷனைப் பற்றி விசாரித்துக்கொண்டிருந்தேன். அதற்குள்தான் நீங்களே மாணிக்கத்தைப் பற்றிக் கூறினீர்கள்..

''அன்றே நான் மாணிக்கத்தைச் சந்தித்தேன். சவடாலான பேர்வழி. சண்முகத்தைப் பற்றி விசாரிப்பது போல் அவனிடம் பேச்சுக் கொடுத்தேன். பேசிக் கொண்டிருக்கும்போதே இரு முறை பாக்கெட்டிலிருந்து சீப்பை எடுத்துத் தலையை வாரிக் கொண்டான். கொஞ்சம் படித்தவன் கூட. என்னிடமிருந்த சீப்பை அவனிடம் நீட்டினேன். யோசிக்காமல், 'ஸார், இதைத் தேடிக்கிட்டே இருக்கிறேன்' என்று சொல்லி விட்டான். பிறகு மிரட்டினதில் உண்மையை ஒப்புக் கொண்டான். பிறகு அவன் வீட்டைச் சோதனை போட்டதில் உங்கள் நகைகள் மாத்திரம் இல்லை, டாக்டர் ராவ் வீட்டில் திருட்டுப்போன சாமான்களும் கிடைத்தன. வீட்டில் தரையைத் தோண்டிப் புதைத்திருந்தான்'' என்று சொல்லி முடித்தார் இன்ஸ்பெக்டர்.

ரமேஷின் அம்மாவுக்குத் தன் நகைகள் கிடைத்தது பற்றி ஒரே மகிழ்ச்சி.

''மாணிக்கந்தான் திருடன் என்று சங்கர்தான் கண்டுபிடித்தான்'' என்றுன் ரமேஷ் சங்கரைப் பெருமையுடன் பார்த்துக் கொண்டே.

''ஆம், சங்கர் வருங்காலத்தில் பெரிய துப்பறியும் புலியாகப் போகிறுன்'' என்ற ராஜாராம் சங்கரை முதுகில் தட்டிக் கொடுத்தார். சங்கருக்கு ரொம்ப வெட்கமாகி விட்டது. மொட்டைத் தலை சண்முகம் வேறு சங்கரை நன்றியுடன் வணங்கினுன்.

தெரிஞ்சுக்கோ

கெஜட்

அரசாங்கத் தகவல்கள் பற்றிய அதிகாரபூர்வமான அறிவிப்புகள் கொண்டது -கெஜட்'. இதைப் புரட்டி விஷயங்களைக் கண்டறிய சாமர்த்தியம் வேண்டும் என்பதுடன் பொறுமையும் வேண்டும்.

வெனிஸ் நகரில் முதன் முதலாக ஆரம்பித்து நடத்தப்பட்ட ஒரு பத்திரிகையின் விலை ஒரு 'கெஜட்' (இது வெனீஸ் நகரத்தில் வழங்கிய ஒரு நாணயமாகும்) இந்த 'கெஜட்' என்ற பெயரையே பிரிட்டிஷ் அரசாங்கம் தங்கள் அதிகாரபூர்வமான அறிவிப்புகள் கொண்ட சஞ்சிகைக்கான பெயராக ஏற்படுத்திக் கொண்டது.

கிழக்கிந்தியக் கம்பெனியின் நிர்வாகம் இந்தியாவில் வேரூன்றியபோது, அவர்கள் 'கெஜட்' பிரசுரிக்கும் வழக்கத்தை இங்கு மேற்கொண்டார்கள்.

இந்தியாவில் பிரசுரிக்கப்பட்ட முதல் 'கெஜெட்' லத்தீன் மொழியில் பிரசுரிக்கப்பட்டதாகும். அதன் பெயர் 'டெஸ்கிரிப் டு இண்டியா' (Descrip to India).


தங்கள் வசம் வரும் பிரதேசங்களின் முழு விவரம் பற்றி, நிர்வாகம் நடத்துபவர்களுக்குத் தகவல் தெரியவேண்டியிருந்தது. 1797 மே மாதம் 9ந் தேதி கிழக்கிந்தியக் கம்பெனியின் டைரக்டர்கள் ஜில்லா மாஜிஸ்திரேட்டுகளுக்கு விடுத்த சுற்றறிக்கையில், பிரதேச விவரம், அங்குள்ள மக்களின் நிலைமை, வர்த்தக நிலவரம் இவை பற்றி உத்தரவிட்டனர். இத்தகவல்களை எல்லாம் ஒன்று சேர்த்து அவ்வப்போது பிரசுரிக்கப்பட்டவையே — 'கெஜட்டீர்' என்று விளங்கலாயிற்று.

கல்கத்தா 'கெஜட்'தான் முதலில் ஆங்கில மொழியில் பிரசுரிக்கப்பட்டதாகும். 1784 மார்ச் 4ந் தேதி இது ஆரம்பிக்கப் பட்டது. ஏராளமான தகவல் அந்த கெஜட்டிலிருந்து கிடைக்கும்படியாக அது பிரசுரிக்கப்பட்டிருந்தது.

பல பகுதிகளிலிருந்து அதிகாரிகளால் சேகரித்து அனுப்பப்படும் தகவல்களைக் கோவைப்படுத்திப் புத்தகங்களாகப் பிரசுரிக்க வேண்டும் என்பதில் வைஸ்ராய், லார்ட் கர்ஸான், மிகவும் அக்கறை காட்டினுர். இந்தக் கெஜட்டீர்கள் நிர்வாகம் நடத்துபவர்களுக்கு வழிகாட்டியாக இருக்கவே தோற்றுவிக்கப்பட்டது. ஆனுல் இவை பிரயாணி, மாணவர், பொதுமக்கள் ஆகியவர்களுக்கும் உபயோகமாகும்படி கெஜட்டீர்கள் திருத்திப் பிரசுரிக்கப்பட்டு வந்தன.

ஆனுல் 'கெஜட்'டுக்கள் மட்டும் அன்றிருந்த மேனிக்கு அழிவில்லாதபடி இன்றும் இருந்து வருகின்றன.

— ஜெமினி ஏ. பாஜீ



முயலும் முள்ளம் பன்றியும்



ஓரே ஒரு காட்டிலே ஒரு முயல் இருந்தது. 'தன்னை யாரும் ஓட்டப் பந்தயத்தில் ஜெயிக்க முடியாது' என்று கர்வம் பிடித்து அலைந்தது. எல்லா மிருகங்களுக்கும் 'இந்த முயலுக்கு எப்படியாவது சரியான பாடம் கற்பிக்க வேண்டும்' என்ற எண்ணம் இருந்தது.

அந்தச் சமயத்தில் காட்டுக்கு இரட்டைப் பிறவிகளான முள்ளம் பன்றிச் சகோதரர்கள் வந்து சேர்ந்தனர். மற்ற மிருகங்களுடன் சேர்ந்து முயலைக் காட்டை விட்டே துரத்துவதற்கு இந்த முள்ளம் பன்றிகள் ஒரு திட்டம் வகுத்தன.

அத்திட்டத்தின்படி முயலைச் சந்திக்க நரி சென்றது. ''முயலாரே ! உம்மைப் பந்தயத்தில் தன்னால் தோற்கடிக்க முடியும் என்று புதிதாக வந்துள்ள முள்ளம் பன்றி பெருமையடித்துக் கொள்வது உம் காதில் விழுந்ததா?'' என்று கேட்டது.

''அப்படியா சேதி?'' என்று குதித்தது முயல்.

''ஆனால் பந்தயத்துக்குப் போடும் நிபந்தனை மிகவும் பயங்கரமாயுள்ளது. தோற்றவர் காட்டை விட்டே ஓட வேண்டுமாம். அதற்குச் சம்மதித்தால் பந்தயத்துக்குத் தயார்என்று கூறுகிறது''என்றது நரி.

''சரிதான், நாளைக் காலையில் மைதானத்தில் என்னைச் சந்திக்கச் சொல்'' என்றுகூறியது முயல்.

அடுத்த நாள் விடியற்காலை முதலே இந்தப் பந்தயத்தைக் காண மிருகங்கள் கூடின. பந்தய தூரம் ஐந்து மைல்கள். காட்டின் நடுவே செல்லும் பாதையில் ஓடிப் பந்தய எல்லையை முதலில் தாண்டுபவர் ஜெயித்தவர். தோற்றவர் உடனே காட்டை விட்டு ஓடிவிட வேண்டும்.

நரியார் சைகை செய்து அனுமதி கொடுத்த உடன் முயலும் முள்ளம் பன்றியும் புறப்பட்டன. சிறிது நேரத்துக்குப் பிறகு முயல் நின்று திரும்பிப் பார்த்தது. ஆனால் கண்ணுக்கெட்டிய தூரம் வரை முள்ளம்பன்றியைக் காணவில்லை. இருப்பினும் அது முன்னிலும் வேகமாக ஓடியது.

வெற்றிக் கோடு தென்பட்டது. முயலின் மனத்தில் உற்சாகம் பொங்கியது. ஆனால் கோட்டை நெருங்க நெருங்க அதன் கண்களில் மிருகங்கள் கூட்டமாக நின்று ஏதோ செய்து கொண்டிருப்பது தெரிந்தது. கோட்டைத் தாண்டிக் கூட்டத்துக்குள் சென்று பார்த்தவுடன் முயலுக்கு மயக்கமே வந்து விட்டது. ஆம்! முள்ளம்பன்றி களைத்துப் போய்ப் படுத்திருந்தது. மற்ற மிருகங்கள் அதற்கு விசிறிக் கொண்டிருந்தன.


அடுத்த விநாடி தலையைத் தொங்கப் போட்டபடி காட்டைவிட்டு ஓடியது கர்வம் பிடித்த முயல்.

முயல் மறைந்ததும் மிருகங்கள் அனைத்தும் விழுந்து விழுந்து சிரிக்கத் தொடங்கின. இரட்டைப் பிறவிகளான முள்ளம் பன்றிச் சகோதரர்களில் அண்ணனை ஆரம்பத்திலும் தம்பியை இறுதியிலும் இருக்க வைத்து முயலைச் சாமர்த்தியமாக ஏமாற்றி ஜெயித்தது குறித்து மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தன மிருகங்கள். பாவம் முயல். புதிய காட்டில் என்ன கஷ்டப்படுகிறதோ !

ஏசு பிறப்பதற்கு முந்நூறு ஆண்டுகளுக்கு முன்பு; ரோமானியர்களின் புகழ் ஓங்குவதற்கு முன்பு, கார்தேஜ் பலமும் செல்வச் சிறப்புமாக விளங்கிய காலத்தில், மத்திய தரைக் கடல் பிரதேசத்தில் புகழ்பெற்று விளங்கியது கிரீஸ் தேசம். இங்கு வாழ்ந்தவர்கள் தான் 'கிரேக்கர்கள்' என்று புகழப்பட்டார்கள். கிரீஸ் நாட்டின் வடக்குப் பகுதியில் மாசிடோனியா என்றொரு நாடு. கிரீஸோடு இணையாமல் தனித்திருந்தது. பலம் பொருந்தியதாகவும் இருந்தது. இன்றைய பல்கேரியா தேசம் தான் அன்றைய மாசிடோனியா. அதன் அரசராக கி.மு. 359ல் அரியணை ஏறியவர் மன்னர் இரண்டாம் பிலிப். வெல்ல முடியாத ஒரு போர்ப் படையை உருவாக்கிக் கிரேக்க நாட்டின் பகுதிகளைத் தம் ஆளுகைக்குள் கொண்டு வந்தார் பிலிப்.

மகா அலெக்ஸாந்தர்


கிருஷ்ணவேணி




மாசிடோனியர்கள் அதிகக் கல்வியறிவும் நாகரிகமும் அற்றவர்கள். முரட்டுக் குணம் படைத்தவர்கள். ஆனால் போர் புரிவதிலே வல்லவர்கள். அறிவிலும் நாகரிகத்திலும் மேலை நாடுகளிலேயே முன்னோடிகளாக விளங்கிய கிரேக்கர்களின் நாகரிகங்களைப் பழக்கிக் கொண்டார்கள் மாசிடோனியர்கள். மிகப் பெரியதாக விளங்கிய பாரசீக சாம்ராஜ்யத்தின் மீது பாய்வதற்குத் திட்டமிட்டுக் கொண்டிருந்தார் மன்னர் பிலிப்.

அப்போது....

பிலிப்பின் மனைவி, ராணி ஒலிம்பியா. தன் கணவனை ஏனோ இவள் வெறுத்தாள். இப்படிக் கணவனுக்கும் மனைவிக்குமிடையே வெறுப்பு வளர்ந்துள்ள குடும்பத்தில்தான் ஒரு வீரன் பிறந்தான். எந்த ஒரு பெயரைக் கேட்டாலே மன்னர்கள் நடுங்கினார்களோ, ஆசியாவிலும் ஐரோப்பாவிலும் எந்த ஒரு வீரனுடைய வாழ்க்கையை இன்றும் கதைகளாகச் சொல்லி வருகிறார்களோ, எந்தப் பெயரைக் கேட்டதுமே போர் செய்யாமலேயே பல நாட்டு மன்னர்களும் அவனுடைய ஆளுகைக்கு உட்படுவதா





கப் பணிந்தார்களோ அப்படிப்பட்ட ஒரு வீரன் பிறந்தான். ஒன்பதே ஆண்டுகளில் அன்று மக்களுக்குத் தெரிந்திருந்த உலகத்தின் பெரும் பகுதியை வென்று தன் ஆளுகையின்கீழே கொண்டு வந்த வீரன் அவன். இன்றைக்கு 2296 ஆண்டுகளுக்கு முன்னால் மாவீரன் என்று எல்லோராலும் ஒருமனதாக மதிக்கப்பட்ட அவன் இறந்தபோது அந்த வீரனின் வயது முப்பத்து மூன்றுதான்.

யார் அந்த மாவீரன்?.

மகா அலெக்ஸாந்தர் — ஆம், பாஞ்சாலத்தின் பராக்கிரமம் மிக்க போரஸ் மன்னரோடு போரிட்டு வெற்றி கண்ட அதே அலெக்ஸாந்தர்தான்.

குழந்தை பிறந்தபோது ராணி ஒலிம்பியா மன்னரிடம் கூறினாள்: ''இதற்குத் தகப்பன் நீங்கள் இல்லை. இதனுடைய தந்தை கடவுளர்களில் ஒருவர்'' என்று. குழந்தை பிறந்த ஆண்டு கி.மு. 356. மாசிடோனியாவிலுள்ள பெல்லா என்ற ஊரில். தாயின் கூற்றைத் தனயனும் நம்பினான். தான் மனிதர்களின் மகனல்ல. ஸீயஸ் கடவுளே தன் தந்தை என்று எண்ணினான். ஆகவே சொந்தத் தகப்பனாரை வெறுத்தான்.

இருந்தாலும் மன்னர் பிலிப் தம் மைந்தனுக்குப் போர்க் கலையில் பூரணப் பயிற்சி அளித்தார். அரிஸ்டாடில் என்ற புகழ்பெற்ற கிரேக்க ஞானியிடம் கல்வி கற்க ஏற்பாடு செய்தார்.

ஒரு சமயம் மன்னர் பிலிப் பெருந்தொகை கொடுத்து ஒரு குதிரையை வாங்கினார். அற்புதமான அசுவம் அது. அதை யாராலும் அடக்கவே முடியவில்லை. எவரையும் அது தன் அருகில் நெருங்க விடவில்லை. அப்படியொரு முரட்டுக் குதிரை. ஆனால் கம்பீரமான குதிரை. ''அந்தக் குதிரையை நான் அடக்கிக் காட்டுகிறேன்'' என்றான், பன்னிரண்டே வயதான அலெக்ஸாந்தர். ''அதை அடக்கிப் பணிய வைத்தால் அந்தக் குதிரையை உனக்கே பரிசாகத் தருகிறேன்'' என்றார், மன்னர் பிலிப். குழந்தையிலேயே அவனிடமிருந்த மனோதிடமும் எதையும் சாதிக்க வேண்டும் என்ற உறுதியுமே அந்த முரட்டுக் குதிரையை அடக்கி அதையே பரிசாகப் பெறச் செய்தது. அக்குதிரையின் பெயர் பெஸிஃபெலஸ். தன் முதுகில் ஏற அனுமதித்த அன்றிலிருந்து அந்த அற்புதக் குதிரை அலெக்ஸாண்டருக்கு வெற்றி மேல் வெற்றியாகக் குவித்துக் கொண்டே இருந்தது. மத்திய கிழக்கை யெல்லாம் வென்று

இந்தியாவிற்குள் புகுந்து பாஞ்சாலத்தின் மன்னன் போரஸுடன் போரிட்டு வெற்றி பெறும் வரை ஒவ்வொரு போர்க் களத்திலும் அந்தக் குதிரைமீது அமர்ந்துதான் படைகளை நடத்திச் சென்றார். அப்படித் தன் எஜமானருக்கு உண்மையாக உழைத்தது அக்குதிரை. பாஞ்சாலப் போரிலே பட்ட காயங்களும், முதுமையும் சேரவே உயிரிழந்தது. அதன் நினைவாகப் (பாஞ்சாலத்தில்) புஸபாலா என்று ஒரு நகருக்குப் பெயரிட்டார்.

அலெக்ஸாந்தர் அரியணை ஏறும் போது வயது இருபது. அவரைச் சுற்றிலும் விரோதிகள். அவர்கள் இறந்த மன்னரின் இரண்டாவது மனைவியின் பச்சிளங் குழந்தையையே வாரிசாக மதித்தார்கள். தன் உரிமையை நிலைநாட்ட வாளேந்தினான் இளைஞன் அலெக்ஸாந்தர். போர்க் கலையில் ஈடு இணையற்றவனை அவன் முன்னால் விரோதிகள் பொடிப் பொடியானார்கள்.

கிரேக்க நாடு முழுமையும் தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததும் பரந்து கிடந்த பாரசீக சாம்ராஜ்யத்தைத் தாக்கலானார். பர்சியாவை அப்போது மூன்றாம் டாரியஸ் மன்னர் ஆண்டு வந்தார். கிரீஸைப் போல ஐம்பது மடங்கு பெரிய தேசம். கிரேக்க மக்களைப் போல இருபது மடங்கு அதிக ஜனத்தொகை கொண்ட நாடு பாரசீகம். அத்தனை பெரிய சாம்ராஜ்யத்தை வெற்றி கொள்ளப் புறப்பட்டு விட்டார் அலெக்ஸாந்தர்.

பாரசீகர்களிடம் ஏராளமான படை பலம் இருந்தது. ஆனால் முறையான போர்ப் பயிற்சி இல்லை. படைகளை நடத்திச் செல்லும் திறமை மிக்க தலைவர்கள் கிடையாது. பயமேயறியாத வீரன் அலெக்ஸாந்தர். தம் படைகளை வெற்றிப் பாதையில் நடத்திச் செல்லும் கலையில் வல்லவர். அவரது குதிரைப் படையின் சாகஸத்தின் முன்னால் எந்தப் பெரும் படையும் நிற்க முடியாது. அலெக்ஸாந்தரின் காலாட் படைகளுக்கு பாலாங்க்ஸ் (phalax) என்று பெயர். எதிரிகளால் பிளக்க முடியாத அணிவகுப்பு இது.

முதல்போர் கிரானிகஸ் நதிக்கரையில். அலெக்ஸாந்தருக்குத்தான் வெற்றி. பாரசீகர்கள் ஓட்டமெடுத்தார்கள்.. இரண்டாவது போர் இஸஸ் என்னுமிடத்தில். மன்னர் டாரியஸ் இதில் முழுமையாக முறியடிக்கப் பட்டார். தம் குடும்பத்தைக் கூடக் காப்பாற்ற முடியாமல் நிர்க்கதியாகத் தவிக்கவிட்டு ஓட்டமெடுத்தார். கைதிகளான பாரசீக மன்னரின் மனைவி மக்களை அலெக்ஸாந்தர் கண்ணியமாக நடத்தினார்.

ஆசியாவுக்குள் அடியெடுத்து வைக்கு முன் பாரசீகர்களின் கடற் படையை அழித்தாக வேண்டும். அப்படியே செய்தார். இருநூறு ஆண்டுகளாகப் பாரசீகர்களால் ஆதிக்கம் செலுத்தப்பட்டு வந்த எகிப்துக்குள் புகுந்தார் அலெக்ஸாந்தர். விடுதலை அளிக்க வந்த வீரர் என்று அவரை வரவேற்றார்கள் எகிப்தியர்கள். நைல் நதியின் முகத்துவாரத்தில் தம் பெயரால் ஒரு நகரை நிர்மாணித்தார். மிகப் பிரபலமான துறைமுகப்பட்டினமாகவும் நாகரிகத்தின் இருப்பிடமாகவும் விளங்கும் அலெக்ஸாந்திரியா நகரம்தான் அது. அவர் வெற்றி வாகை சூடிய இடங்கள் நகரங்களுக்கெல்லாம் அலெக்ஸாந்திரியா என்று பெயரிட்டுக் கொண்டே போனார். மாவீரன் அலெக்ஸாந்தரின் சாதனைகள் எப்படிப்பட்டவை? அவருடைய காலத்தில் உலகப் படம் ஏதும் கிடையாது. வழி துறை தெரியாத நிலையிலேயே அலெக்ஸாந்தர் தம் படைகளை நடத்திச் சென்ற முறை ஆச்சரியமானது. பாரசீகத்தின் தலைநகரானபெர்ஸிபோலிஸிலிருந்துகாஸ்பியன் கடலுக்கும் அங்கிருந்து ஆப்கானிஸ்தானத்தின் கோடி வரையும், தாண்ட முடியாத இந்துகுஷ் மலையை வடக்கில் கடந்து மறுபடியும் மத்திய ஆசியாவில் உள்ள சாமர்கண்ட், தாஷ்கண்ட் வந்து தென் கிழக்கிலே கைபர் கணவாய் வழியாக இந்தியாவுக்குள் நுழைந்து - இந்த நாகரிக யுகத்தில்கூட நினைத்துப் பார்க்க முடியாத தூரத்தை எவ்வித வசதியுமற்ற அந்தக் காலத்தில் தம்முடைய 40,000 படை வீரர்களுடன் கடந்தார் என்பது அற்புதச் செயல்தானே? இந்தச் செயலுக்காக அம்மாவீரன் பெருமைப்படுவதில் தவறில்லையே. அதனால்தான் தாம் சென்ற வழியிலே வென்ற நகரங்களுக்கெல்லாம் தம் பெயரை (அலெக்ஸாந்திரியா) வைத்துக் கொண்டே போனார்.

இப்படி வெற்றி மேல் வெற்றி கொண்டு பல நாட்கள் தம் சொந்த நாட்டிலிருந்து விலகி இருந்ததினால் இவருடைய விரோதிகள் 'போர்க் களத்தில் அவர் இறந்துவிட்டதாகப் புரளியைக் கிளப்பிவிட்டார்கள். இதனால் கிரேக்க மாகாணங்களில் குழப்பமும் கொந்தளிப்பும் ஏற்பட்டன. விரோதிகளின் கை ஓங்கலாயிற்று. இச்செய்தி போர்க் களத்துக்கு எட்டியதும் அலெக்ஸாந்தர் உடனே தம் தாய்நாட்டுக்கு விரைந்தார். தாம் உயிரோடு

இருப்பதை மக்களுக்கு உணர்த்தினார். விரோதிகளுக்குத்தாம் எத்தகையவர் என்பதைக் காட்ட தெபஸ் நகரையே கொளுத்தி அழித்தது இப்போதுதான். அந்நாடுகளில் உள்ள கோயில்களையும் கவிஞர் பண்டாரின் இல்லத்தையும் தவிர எல்லாம் சாம்பலாயின. ஆறு யிரம் தெபனியர்கள் தூக்கிலிடப்பட் டார்கள். முப்பதினாயிரம் பேர் அடிமைகளாக விற்கப்பட்டார்கள்.

அலெக்ஸாந்தர் தமது திக்விஜயத்தில் ஆசியா மைனரிலுள்ள பைர்ஜியா நகருக்கு விஜயம் செய்தபோது அங்கு ஒரு ரதத்தைக் காட்டினார்கள். அது மாமன்னர் கார்டியஸினுடைய ரதம். அதன் நுகத்தடியில் உள்ள முடிச்சை யார் ஒருவர் அவிழ்க்கிறார்களோ, அவர்கள் இவ்வுலகை ஆளுவார்கள் என்று ஒரு நம்பிக்கை இருப்பதாகக் கூறினார்கள். அலெக்ஸாந்தர் அதன் முடிச்சை அவிழ்த்துக் கொண்டிருக்கவில்லை. தமது வாளை உருவினார். ஒரே வீச்சில் அதன் முடிச்சை வெட்டித் துண்டாடி அந்த ரதத்தின் நுகத்தடியை விடுவித்தார். 'கார்டியன் நாட்' என்று புகழ்பெற்ற அதைத் துண்டாடி அதன் நம்பிக்கையை உண்மையாக்கி அன்றைய உலகத்தை ஆண்டவர் அலெக்ஸாந்தர், மாஸிடோனியாவின் மன்னர். எகிப்து, பாரசீகம், ஆசியா ஆகிய அத்தனைக்கும் மாமன்னராக விளங்கினார்.

வெற்றிக்கு மேல் வெற்றி. அலெக்ஸாந்தர் தம் படைகளை அற்புதமான முறையில் நடத்திக் கொண்டு போனார். யுத்தம் ஆரம்பிக்கும் முன்னதாகத் தங்களை எதிர்க்க வருவது அலெக்ஸாந்தர் என்பதை விரோதிகள் அறிந்ததும் சரண் அடைந்தார்கள்.

''கடவுளின் மகனாக வந்து அவதரித்துள்ள ஒரு மாவீரனை எதிர்த்துப் போரிடுவார்களா?'' என்றாராம் ஒரு நாட்டு மன்னர். அலெக்ஸாந்தர் கடவுளின் மகன் என்ற எண்ணமே அவர் படைகளுக்கு அப்படியொரு பலத்தையும் தைரியத்தையும் அளித்திருந்தது. அதற்கு ஏற்றபடி அவரும் அற்புத ஆற்றலுடன் போரிட்டார். தம்முடைய மகத்தான குதிரை பெஸிஃபேலஸின் மீதமர்ந்து போர்க் களத்தின் நடு மையத்திலே கம்பீரமாக நின்று தம் படை வீரர்களை ஊக்குவிப்பார்.

பாரசீக மன்னர் முடிவாகத் தோல்வி அடைந்ததும் அவரைத் தம் கையாலேயே • கொல்ல வேண்டும் என்று வந்தவருக்கு ஏமாற்றம். அவரை அவரது படைத் தலைவர்களே கொலை செய்து விட்டார்கள். பாரசீகக் கைதி

களைத் தம் கையாலேயே கொல்வதைத் தம்முடைய அன்றாட அலுவல்களில் ஒன்றாக வைத்துக் கொண்டிருந்தார் அலெக்ஸாந்தர். மாவீரனானாலும் கர்வம் மிக்கவர். தாம் கடவுளின் மைந்தன் என்ற எண்ணத்திலே எதையும் செய்யப் பின் வாங்கியதில்லை. ஆனால் பலர் இவரைக் கடவுளின் மகன் என்பதை ஏற்கவில்லை. இவர்களில் காலிஸ்தனிஸ் என்ற ஒரு தத்துவ ஞானி. ''நீ உன்னைக் கடவுளின் மைந்தன் என்று கூறிக் கொள்ளுவதால் கடவுளர்களை அவமானப்படுத்துகிறாய்'' என்றார் இவர். மன்னர் முன் தலை வணங்க மறுத்தார். இதனால் வெகுண்ட அலெக்ஸாந்தர் அவரைக் கொன்றே விட்டார்.

அலெக்ஸாந்தரிடம் ஒரு வேடிக்கையான பழக்கம். தாம் கைதிகளாகப் பிடித்த விரோதிகளின் உயர் அதிகாரிகளைக் கொல்லுவதா விடுவிப்பதா என்பதை முடிவு செய்யப் பகடைக் காய்களை உருட்டுவாராம்.

ஆசியாவிலிருந்தபோது அலெக்ஸாந்தரின் பழக்க வழக்கங்களில் மாறுதல் ஏற்பட்டது. கிரேக்கன் என்ற நினைப்பை ஒதுக்கிக் கீழ் நாட்டுக்காரரைப் போல் நடந்து கொண்டார். பாரசீகரைப் போல் ஆடையணிந்தார். ஆடம்பரமாக வாழலானார். ஆசியாவின் பல பகுதிகளிலுமிருந்து முப்பதினாயிரம் வாலிபர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களைக் கிரேக்க வீரர்களைப் போல் பயிற்றுவித்தார்.

தம்முடைய படைகளை நடத்திச் செல்ல ஆசியாவின் பொட்டல் வெளிகளிலும் வனாந்தரங்களில் அற்புதமான சாலைகளை அமைத்துக் கொண்டு போனார். இந்தப் பாட்டைகள் பிற்காலத்தில் புதிய பகுதிகளில் வியாபாரப் போக்குவரத்துக்கள் ஏற்படவும் புதிய நகரங்கள் உருவாகவும் வழி வகுத்தன.

ஓர் இனத்தோடு இன்னோர் இனம் கலந்து அதனால் ஒற்றுமைக்கும் ஒருமைப்பாட்டுக்கும் வழி வகுத்தார் அலெக்ஸாந்தர். தம் மாஸிடோனிய வீரர்களிடம் ஆசியப் பெண்களை மணந்து கொள்ளும்படி ஊக்குவித்தார். முன் மாதிரியாகத் தாமே தம் விரோதியான பாரசீக மன்னரின் அழகிய மகளையே மனைவியாக்கிக் கொண்டார். கிழக்கையும் மேற்கையும் ஒருங்கிணைக்கும் ஒப்பற்ற செயலாக இதைக் கருத வேண்டும்.

சரித்திரத்தின் போக்கையே மாற்றியமைத்த மாவீரர்களின் வரிசையிலே முதலாவதாக நிற்கக் கூடிய தகுதி படைத்தவர் அலெக்ஸாந்தர். தாம் எதைச் செய்தாலும் அது புனிதமானது என்ற நம்பிக்கை கொண்டிருந்தார்.

அலெக்ஸாந்தரின் கடைசி நாட்களில் கருமேகம் சூழலாயிற்று. நண்பர்களையே சந்தேகிக்கும்படியான சூழ்நிலைகள் உருவாயின. சூழ்ச்சிகள் நடப்பதாகச் சந்தேகப்படலானார். போர்க்களத்தில் ஒரு சமயம் தம் உயிரைக் காத்த கிளைடஸ் என்ற வீரனையே ஆத்திரத்தில் கொன்றுவிட்டார்.

பஞ்சாபில் போரஸ் மன்னரை வென்றதும் அலெக்ஸாந்தர் கங்கைக் கரை வரை போகத் திட்டமிட்டார். ஆனால் வீரர்கள் முன்போல அந்த மாவீரனின் கட்டளைக்குக் கீழ்ப்படியவில்லை. அந்தக் கவர்ச்சி மங்கலாயிற்று. போர் வீரர்கள் தாய்நாட்டை விட்டு வந்து எட்டு வருடங்களாகி விட்டன. பதினோராயிரம் மைல்கள் நடந்து வந்திருந்தார்கள். இதற்கு மேலும் போரிட்டுக் கொண்டு போக விரும்பவில்லை. வெற்றி போதை தெளிந்து விட்டது. வெறி அடங்கி விட்டது. மனைவி மக்களைக் காண வேண்டுமென்ற ஆவல் மேலோங்கி விட்டது. வீரர்களின் விருப்பமில்லாத நிலையில் அலெக்ஸாந்தர் தம் தாய்நாடு நோக்கித் திரும்பலானார். ஒரு போரிலாவது தோல்வியை அளிக்காத, ஒரு பொழுதும் விசுவாசத்தை மறக்காத மாஸிடோனிய வீரர்களில் பலர் திரும்பும் வழியில் பலூசிஸ்தானத்துப் பாலைவனத்தின் வெப்பம் தாங்காமலும் தாகத்தாலும், களைப்பாலும் இறந்தார்கள். அலெக்ஸாந்தரின் உடல் நலமும் பாதிக்கப்பட்டது. இளமை மாறாத நிலை. வாலிபம். ஆனாலும் கொடிய ஜுரத்தினால் பீடிக்கப்பட்டார். தாம் பிழைக்கப் போவதில்லை என்பதை உணர்ந்து கொண்ட அந்த மாவீரர் தம் வீரர்கள் ஒவ்வொருவரையும் தனித் தனியாகக் கண்டு ஆசி கூற விரும்பினார். அவருடைய மரணப் படுக்கையின் அருகே மனமுடைந்த மாஸிடோனிய வீரர்கள் ஒவ்வொருவராக வந்தார்கள். ஒவ்வொருவரையும் இனம் கண்டு கொண்டு அவர்களின் சேவைக்காகப் பாராட்டினார் அந்த மாமன்னர்.

அற்புதமான அழகும், அதிசயமான ஆற்றலும், ஆச்சரியமான மனோதிடமும் கொண்ட மாவீரர், தம் விரோதியிடமும் கருணை காட்டக்கூடியவரும் மனிதாபிமானம் மிக்கவருமான அலெக்ஸாந்தர் கி. மு. 323ல் தாய்நாட்டுக்குத் திரும்பாமலேயே வழியில் பாபிலோன் நகரில் தமது முப்பத்து மூன்றாவது வயதில் காலமானார்.

தெரியுமா?

1007. உலகில் மிக அதிகமான மக்களால் பேசப்படும் மொழி எது என்று தெரியுமா?

1008. உலகின் மிகச் சுறுசுறுப்பும் பரபரப்பும் மிக்க ரயில்வே ஜங்ஷன் எங்குள்ளது?

1009. லீப் வருஷம் அறிமுகப்படுத்தப்பட்டது யாரால்?

1010. உலகின் மிகப் பழைமையான சர்வகலாசாலை எங்குள்ளது?

1011. எந்த ஒரு மொழிக்கு மிகக் குறைவான எழுத்துக்கள்?

1012. பின்னல் பசை தடவப்பட்ட தபால் தலைகள் புழக்கத்துக்கு வந்தது எந்த ஆண்டிலிருந்து?

1013. ஜெட் விமானிகள் குறிப்பெழுத எத்தகைய பேனாக்களை உபயோகிக்கிறார்கள்?

1014. இங்கிலாந்தில் கிறிஸ்துமஸ் கொண்டாட்டத்துக்குத் தடை விதிக்கப்பட்டதுண்டா?

1015. வெண்ணிலவுதான் உண்டு. பார்த்திருப்பீர்கள். நீல நிலவு ஏற்பட்டதுண்டா?

1016. எந்தத் தேசத்தின் தேசியக் கொடி மிகத் தொன்மை வாய்ந்தது?

1017. கிறிஸ்துமஸ் வாழ்த்து அட்டைகள் முதன் முதலில் அனுப்பப்பட்டது எந்த ஆண்டிலிருந்து?

1018. ஆஸ்திரேலிய ஆதிவாசிகளின் ஆயுதமான பூமராங் போர்முனையில் எத்தனை தூரம்வரை போகக்கூடும்?

1019. நம் உடலில் 'ஃபன்னி போன்' (Funny bone) என்ற ஓர் அவயவம் உள்ளது. இது ஓர் எலும்பா?

1020. பனானா ஆயில் (வாழைப்பழ எண்ணெய்) என்பது வாழைப்பழத்திலிருந்து எடுக்கப்படுகிறதா?

1021. இங்கிலாந்தை ஆண்ட புகழ் பெற்ற மன்னர் எட்டாம் ஹென்றி அரசாங்க ஒப்பந்தங்களில் எப்படிக் கையெழுத்திடுவார் தெரியுமா?

1022. சீன மொழித் தட்டெழுத்து யந்திரத்தில் (டைப்ரைட்டர்) எத்தனை எழுத்துக்கள் இருக்கும் தெரியுமா?

1023. ஒரு பள்ளிக்கூடப் பையன் ஒரு தபால் தலையைச் சில காசுகளுக்கு விற்றான். ஆனால் அதன் இன்றைய மதிப்பு என்ன தெரியுமா?

1024. ஆமையின் மிக அதிகமான வேகம் எவ்வளவு தெரியுமா?

1025. ஒரு பெட்டைக் கோழி மிக அதிகமாக எத்தனை முட்டைகள் இடும்?

1026. தட்டெழுத்தில் (டைப்ரைட்டிங்) ஒரு நிமிஷத்துக்கு மிக அதிகமாக எத்தனை வார்த்தைகளை டைப் செய்யலாம்?

1027. மனிதனுடைய தலை முடியின் கனம் எவ்வளவு தெரியுமா?

1028. உலகின் மிகப் பெரிய உதை பந்தாட்ட மைதானம் எங்குள்ளது?

1029. உலகில் மிக மிக அதிகமாக விற்பனையாகும் புத்தகம் எது தெரியுமா?

1030. மாமிசம் உண்ணும் பிராணிகளில் மிகப் பெரியது எது?

தெரியுமே!

விடைகள்: 1007. வடக்கு சீனர்களின் மொழி. இதற்கு மாண்டரின் என்றும் பெயர். 460 மிலியன் மக்கள் இம்மொழியைப் பேசுகிறார்கள். 1008. பிரிட்டிஷ் இருப்புப் பாதை அமைப்பின் தென் பிராந்தியப் பிரிவிலுள்ள க்ளாஃபாம் ஜங்ஷன். இங்கு 24 மணி நேரத்தில் 2500 புகை வண்டிகள் வந்து போகின்றன. 1009. ஜூலியஸ் சீஸரால். இன்றைய ஆங்கிலக் காலண்டரை அவர் கி. மு. 45ல் உருவாக்கிய போது. 1010. எகிப்திலுள்ள அல்அஸார் (Al Azhar) கி. பி. 989ல் நிறுவப்பட்ட சர்வகலாசாலை இது. 1011. ஹவாயியன் மொழிக்கு மொத்தம் 12 எழுத்துக்கள் தான். 1012. 1840லிருந்து. 1013. காபிலரி (Capillary) இயக்கம் கொண்ட பேனாக்களே மிக உயரத்தில் மை ஒழுகாதிருப்பதற்காக. 1014. உண்டு. 1644ல் பார்லிமெண்ட் ஒரு சட்ட மூலம் தடை விதித்தது. 1015. ஏற்பட்டிருக்கிறது. இந்த அதிசயம் 1950ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 26ந் தேதி நிகழ்ந்தது. 80,000 சதுர மைலில் மூண்ட காட்டுத் தீயின் விளைவால் ஏற்பட்ட கந்தகத் தூள்கள் மேக மண்டலத்தில் வியாபிக்கச் சந்திரன் நீல நிறமாகத் தோற்றம் கொண்டது. 1016. டென்மார்க்கின் தேசியக் கொடி. வெப்பு பரப்பில் பெரிய வெள்ளைச் சிலுவையோடு கூடியது இக்கொடி. கி. பி. 1218ல் உருவாக்கப்பட்டது. 1017. 1846லிருந்து முதன்முதலில் 1000 வாழ்த்து அட்டைகள் விற்பனை ஆயின. 1018. 250 கெஜ தூரத்திலுள்ள பொருளைக் குறி வைத்துத் தாக்குவதில் வல்லவர்கள் ஆஸ்திரேலிய அபாரிஜின்கள். 1019. இல்லை. இது ஒருவகை நரம்பு. 1020. இல்லை. நிலக்கரியிலிருந்து வடித்தெடுக்கப்படும் ஒரு ரசாயன எண்ணெய் இது. 1021. அவர் கையெழுத்திடவே மாட்டார். அவருக்கு எழுதவே தெரியாது. 1022. 1500 எழுத்துக்கள். 1023. 1856ம் ஆண்டின் பிரிட்டிஷ் கயானாவின் 1 செண்ட் ஸ்டாம்பு ஒரு பள்ளி மாணவனிடமிருந்து ஆறு ஷில்லிங்குகளுக்கு வாங்கப்பட்டது. பல கை மாறிய அந்தபால் தலை ஒரு நிலையில் 16,000 பவுன்களுக்கு விற்கப்பட்டது. இன்று அது 35,000 பவுன்களுக்கு இன்ஷியூர் செய்யப்பட்டுள்ளது. 1024. 0·17 மைல்கள் ஒரு மணிக்கு. 1025, தென் அமெரிக்காவிலுள்ள ஒருவகை கறுப்புக்கோழி 365 நாட்களில் 355 முட்டைகள் இட்டிருக்கிறது. 1026, நிமிஷத்துக்கு 170 வார்த்தைகள். ஒரு தப்புக்கு 10 வார்த்தைகள் தண்டனையாகக் கணக்கிடப்பட்டு. 1027. ஓர் அங்குலத்தில் 500ல் ஒரு பங்கு கனம். 1028. ரியோ டி ஜெனிரோவில் உள்ள மாரகானு ஸ்டேடியம். 1029. பைபிள். 1030. அலாஸ்காவிலுள்ள கோடியாக் கரடிகள். மூக்கிலிருந்து வால்வரை இதன் ஆணின் சராசரி நீளம் 8 அடிகள். நிறை 1200 பவுண்டுகள். சில 13½ அடிகள்கூட இருக்கும்.

'கோகுல'த்தில் வெளியாகும் கதைகளில் காணப்படும் பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனையே ● சென்னை, சேத்துப்பட்டு 'கல்கி' அச்சகத்தில், பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துக்காக ஆர். அனந்தநாராயணனால் அச்சிட்டு வெளியிடப்பட்டது. ● ஆசிரியர்: சதாசிவம்


சாகசத்துக்கு இதோ ஒரு டிக்கெட்!

இந்திரஜாலக் காமிக்குகள்—ஆயிரக்கணக்கான சிறுவர்களை மெய்சிலிர்க்க வைக்கும் மாதமிருமுறை வெளிவரும் பத்திரிகை—சிறுவர்கள் என்ன, பெரியவர்களையும் கூட கவர்ந்துள்ளது இது—ஃபாண்டம் என்ற இறவாத வேதாளத்தின் சாகசச் செயல்களைப் படித்து அனுபவியுங்கள். ஃபாண்டம், மண்ட்ரேகா, மற்றும் பலர் தீமையை எதிர்த்து புரியும் செயல்களில், சாகசம், தீரம், துடிப்பு, ஸஸ்பென்ஸ் எல்லாம் உள்ளன.

ஆங்கிலம், இந்தி, மராத்தி, குஜராத்தி, தமிழ், வங்காளம்—ஆகிய ஆறு மொழிகளில் பிரசுரிக்கப்படுகிறது. எந்தக் குழந்தையும் இந்திரஜாலக் காமிக்குகளைப் படிக்கத் தவறக்கூடாது.

இந்திரஜாலக் காமிக்ஸ்

டைம்ஸ் ஆப் இந்தியா வெளியீடு
டாக்டர் தாதாபாய் நௌரோஜி ரோடு
பம்பாய் - 400001






ராசுவும் வாசுவும் வேட்டையாடிய படலம்...
சுட்டிப் பயல்கள் பறந்தனராம் ஜெட் விமானத்திலே... ஆப்பிரிக்கா
வரவேற்றனன் வேடர்தலைவன், குறை வைக்காமல் உபசரித்தான்
வேட்டைக் கூட்டம் வெகு ஜோராய் காட்டு வழியில் கிளம்பியதே.
குரங்குகளோ குரங்குகள் கூடிப் பழமரங்களிலே கூச்சலிட்டனவே
வாசுவைக் குரங்குகள் திடீரென வட்டமிட்டன; பழங்களையும் சட்டென மறந்துவிட்டனவே.
பரவசமூட்டி யாவரையும் பழரசமுடனே கவருபவை பாப்பின்ஸ் மிட்டாய்களே.
சொக்கும் இன்பம் சொட்டும்
இனிமை, பலே ஜோர்
பார்லே பாப்பின்ஸ்
பழரச மிட்டாய்கள்
PARLE POPPINS
5 பழரசச் சுவைகைகள்—
ராஸ்ப்பெர்ரி, அன்னாசி,
எலுமிச்சை, ஆரஞ்சு,
சாத்துக்குடி ஒவ்வொரு
சுருளிலும் 13 மிட்டாய் வில்லைகள்.